# நெருங்கிய தோழர்களும், நல்லுபதேசமும்



ஆசிரியர் :
ஃபழீலத்துஷ் ஷெய்கு அஸ்ஸெய்யிது அப்துல் அஸீஸ் மௌலானா
குஷ்ஹாலி தவ்வலல்லாஹு ஹயாதஹு

من روائع التراث بتجزئة ...

# النظام الخاص لاهل الاختصاص

ما لذة العيش الا صحبة الفقرا
هم السلاطين والسادات والامرا
فاصحبهم وتادب في مجالسهم
وخل حظك مهما قدموك ورا.

அரசர்களாகவும், அதிகாரிகளாகவும், தலைவர்களாகவும்
இருந்து கொண்டிருக்கிற ஃபுகராக்களை—ஏழைகளுடன்
உறவாடிக்கொள். அதில்தான் வாழ்க்கையின் இன்பமிருக்கிறது.
அத்தகைய உறவைத் தேடிக்கொண்ட நீ எத்தகைய பட்டம்
பதவிகளைக் கொண்டவனாக இருந்தபோதிலும்
அவற்றையெல்லாம் ஒதுக்கிவிட்டு அவர்கள்
சபையில் மரியாதையுடன் நடந்துகொள்.

إعداد:
قطب الدعوة والارشاد سيد الاولياء ...
ومربي السالكين ومنقذ الهالكين ...
الشيخ السيد عبد العزيز مولانا الخوشحالي ...
الحنفي طول الله حياته.

# நெருங்கிய தோழர்களும் நல்லுபதேசமும்




ஆசிரியர் :

ஃபழீலத்துஷ் ஷெய்கு அஸ்ஸெய்யிது

அப்துல் அஸீஸ் மௌலானா குஷ்ஹாலி

தவ்வலல்லாஹுு ஹயாதஹுு

® Copyright Reserved
பதிப்புரிமை ஆசிரியருக்கே

لولا صحبة الاخيار ومناجاة الحق سبحانه وتعالى بالاسحار ما
احببت البقاء فى هذا الدار (امامنا الشافعى رحمه الله)

**இந்நூல்**
**அன்பளிப்புக்குரியது**
**விற்பனைக்கு அல்ல**



நூலின் பெயர் : **நெருங்கிய தோழர்களும் நல்லுபதேசமும்**

ஆசிரியர் : **ஃபழீலத்துஷ் ஷெய்கு அஸ்ஸெய்யிது அப்துல் அஸீஸ் மௌலானா குஷ்ஹாலி தவ்வலல்லாஹு ஹயாதஹு**

பக்கம் : 184

தொடர் இலக்கம் : 25

முதற் பதிப்பு : **அக்டோபர் 2004 - 1425 ரமழான்**

வெளியீடு : **ஜம்யிய்யத்து இஷாஅத்தி அஹ்லிஸ் ஸுன்னா**
105, 2-ம் குறுக்குத் தெரு,
கொழும்பு-11. போன் : 01466113
E-Mail: seyedina@hotmail.com

அச்சிட்டோர் : **ரப்பானியா பிரிண்டிங் பிரஸ்**
12/25, காந்தி தெரு, ஜீவா நகர், திருச்சி-8.
இந்தியா. போன் : 91-431-2701685
E-Mail: rabbaniapress@yahoo.com

## Following are the Addresses where the Book is Available (Free of cost)

### INDIA

KHANKQA - HE _ KHUSHALIYA
Chillagah Shariff Bihar Gad, Mourna Post
Dist. Muzafar Nagar, U.P. India

MUASKAR WOMEN'S ARABIC COLLEGE
Cholukkar Street,
KAYALPATNAM - 628 204. S. India

RABBANIA PRINTING PRESS
New No.249, Old No. 126-6, Adithya Complex,
Big Bazaar, TRICHY-620 008. S.India

### SRI LANKA

JAMEEATU-ISHA-ATHI AHLIS SUNNAH
105, Second Cross Street, Colombo-11
Sri Lanka. Phone : 466113, Fax : 449055

### U.S.A.

JAMEEATU-ISHA-ATHI AHLIS SUNNAH
436, Broad Street, Bristol Canaticut-06010
U.S.A.

### CANADA

M. YUSUF VHQRA
15, Windsomg Court Markham, Ontario
Canada. L3r-8n7, 1-905-479-9483

### SOUTH AFRICA

DARUL ULOOM PRETORIA
P.o. Box : 14296, Laudim-0037, Pretoria
Tel : (27-12-3741721



## சமர்ப்பணம்

الى الحقيقة الفردية روح الوجود دم كل موجود سيد الثقلين وامام
الحضرتين سيدنا محمد صلى الله عليه وآله وسلم
الى كل ولي وولية لله تعالى في مشارق الارض ومغاربها حيث ما حلوا وحلت
ارواحهم في سر علم الله القديم
الى الذين نجا الارض بجاه الى احباب رسول الله صلى الله عليه وآله وسلم
الى الاقطاب والافراد والاوتاد والابدال والاطراز والانجاب
والاغواث والاخيار والعرفاء والنقباء الى هؤلاء جميعا

## எமது வெளியீடுகளில் சில :

1. பாங்கில் திருநபியின் திருநாமம் கேட்டு விரல்களை முத்த வேண்டுமா?
2. கப்ருகளின் மீது கட்டிடம் கட்டலாமா?
3. இறைநேசர்களின் கப்ருகளை முத்தமிடலாமா?
4. ஸியாரத்தை நோக்கிப் பயணம்
5. வஸீலா
6. தராவீஹ் தொழுகையின் எண்ணிக்கை
7. அண்ணலாரின் அகமியம்
8. உத்தமர் உதயம்
9. மௌலிது ஓதுவோம் வாருங்கள்
10. முத்தமிடல்
11. சுந்தர நபியின் சுவனத்துப் பெற்றோர்
12. ஷியாக்களும் அவர்தம் கொள்கையும்?
13. எத்தி வைப்போம் வாரீர்
14. இன்னல்களை நீக்கிடும் இனிய திருநாமம்
15. தப்ஸீர் ஆயத் அந்நூர்
16. செம்மல் நபியைக் காணச் செல்வோம்!
17. அந்-நஜ்த்

JAMIYATU-ISA-ATHI-AHLIS-SUNNA
No.105, Second Cross Street, Colombo - 11. Sri Lanka.
Tel : 466113 Fax : 449055

# மதிப்புரை

தமிழ்நாடு சுன்னத் வல் ஜமாஅத் உலமாசபை செயலாளரும், அஹ்லெ சுன்னத் மாத இதழின் ஆசிரியரும், திருச்சி பஸ்மே ரப்பானியாவின் செயலாளருமான மௌலவி ஹாபிழ் **எப். எம். இப்ராஹீம் ரப்பானி** அவர்கள் மனமுவந்தளித்த மதிப்புரை

புகழனைத்தும் சர்வ ஜீவராசிகள் அனைத்தையும் இல்லாமை என்னும் நிலையிலிருந்து உள்ளமை என்னும் நிலை பக்கமாகக் கொண்டுவந்த மெய் பொருளாகிய அல்லாஹ் என்னும் பரம் பொருளுக்கே உரித்தாகுக.

அடுத்து ஸலாத்தென்னும் கருணையும் ஸலாமென்னும் ஈடேற்றமும், அம்மெய்ப் பொருள் தன்னை அறிய வேண்டுமென ஆசைப்பட்ட போது அந்த ஆசையை நிறைவேற்றுவதற்குரிய முதல் பொருளாகப் படைக்கப்பட்ட அதனுடைய ஜோதியாகிய **"நூரே முஹம்மதி"**யின் மீதும், அந்த ஜோதி மனிதத் தோற்றம் கொண்டு **"முஹம்மத்"** என்னும் உயர்திரு நாமத்தை தரித்து தன்னிலிருந்து தனது சந்ததியை வெளிப்படுத்திய **"அஹ்லெ பைத்துக்கள்"** மீதும், அத்திரு நபியின் தோழர்கள் மீதும், அவர்களை விசுவாசித்து வழிப்பட்ட அனைவர் மீதும் சதா காலமும் சுரந்து பொழிவதாக ஆமீன்.

ஹனபி மத்ஹபின் சட்ட மாமேதை இமாமுல் அஃழம் அபூஹனீபா ரஹிமஹுல்லாஹ் அவர்களிடம் ஒருவர் வருகை தந்து, இமாமவர்களே! ஒருவன் இவ்வுலகில் வாழ்ந்த காலமெல்லாம் ஒரு நபியையோ ஒரு வேதத்தையோ அல்லது ஒரு ஷரீஅத்தையோ பெற்றுக் கொள்ளாமலேயே இறந்து போனான். அவன்மீது நாளை மறுமையில் விசாரணை நடைபெறுமா? எனக் கேட்க, அதற்கு இமாமவர்கள்; ஆம். அவனிடம் இறைவனைக்

குறித்த விசாரணை நடைபெறும். ஏனெனில் அவனுக்குள் இயற்கையாகேவே இறைவனைக் குறித்து சிந்திக்கின்ற அறிவு அவனுக்கு வழங்கப்பட்டிருப்பதாலே என்றனர்.

இந்நிலையில் இறைவனுக்குள் அமைந்துள்ள அவனது எண்ணிலடங்கா ஸிபாத்துக்களான தன்மைகள் அனைத்தையும் ஒரே படைப்புக்குள் அவன் காண வேண்டுமென எண்ணியதன் விளைவுதான் மனித சிருஷ்டியின் வெளிப்பாட்டுக்கு காரணமாக அமைந்தது. அதனால்தான் மனிதன் மட்டும் தன்னைத் தோற்று வித்தவனை அறியும் உயர்ந்ததோர் படைப்பாக விளங்குகிறான்.

இதில் இஸ்லாமிய மார்க்கத்தைச் சார்ந்தோரில் இறைவனைத் தேடிப் பெற்றோர் அளவின்றி காணப்படுகின்றனர். அவர்களை இஸ்லாமிய உலகம் **"ஸூஃபி"** என்றும் **"ஞானி"** என்றும் **"ஆரிஃபு"** என்றும் பல்வேறு பெயர்களால் அடையாளமிட்டுக் காட்டுகிறது. இந்த ஞானிகளிலும் பலதரப்பட்ட கொள்கையு டையவர்கள் இருக்கின்றனர். அவர்களில் **"இஜாதிய்யா"** என்றொரு கொள்கைவாதிகளும், **"ஷுஹூதிய்யா"** என்றொரு சாராரும், **"உஜூதிய்யா"** என்றொரு வகுப்பாரும் இருக்கின் றனர். இம்மூன்று வகுப்பாரில் வஹ்தத்துல் உஜூத் என்னும் கொள்கையுடைய ஞானவான்களே அதிகமாகக் காணப்படு வதோடு இவர்களால் வஹ்தத்துல் உஜூதைப் பற்றிய எண்ணற்ற நூல்களும் வரையப்பட்டு அவை இன்றும் நமக்கிடையே காணப்படுகின்றன.

உதாரணமாக அப்துர்ரஹ்மான் ஜாமி, மௌலானா ஜலாலுத்தீன் ரூமி, அல்லாமா ஷம்ஸுத் தப்ரேஸ், ஷெய்குல் அக்பர் முஹ்யித்தீன் இப்னு அரபி, அல்லாமா அப்துல்கரீம் ஜீலி, அல்லாமா யூசுப் மக்கி, ஸெய்யிதினா முஹ்யித்தீன் அப்துல்காதிர் ஜீலானி, அல்லாமா பா யஸீதுல் பிஸ்தாமி ரஹிமஹுமுல்லாஹ் போன்றோரை குறிப்பிடலாம்.

அதேநேரம் மேற்கூறப்பட்ட இந்த ஞானவான்களால் எழுதப்பட்ட நூல்களில் காணப்படும் கருத்துக்கள் ஒரு சராசரி மனிதனாலோ அல்லது தரீக்கத்துடைய பாதையில் நடைபயிலும் ஒரு மாணவனாலோ விளங்கிக் கொள்ளக்கூடிய கருத்துக்களல்ல.



மேலும் மனித உணர்வுகளால் சூழப்பட்டுள்ள அறிவை கொண்டு விளங்கிக் கொள்ளப்படும் எந்தவொரு விளக்கமும் உண்மையாக ஒருபோதும் இருக்க முடியாது என்பது பேரறிவா ளர்களின் தீர்ப்பாகும். இதனாலேயே இந்த ஞானவான்களின் நூல்களில் காணப்பட்ட கருத்துக்களும் விஷயங்களும் சராசரி வாதிகளால் விமர்சனத்திற்கு உள்ளாக்கப்பட்டதோடு இந்த ஞான வான்களை மதங்கெட்டவர்கள் என்ற தீர்ப்புக்கும் இலக்காக்கிற்று.

ஞானம் என்பது மிக நீண்டதோர் பேச்சாகும். வெளிப் படையான இஸ்லாமியக் கொள்கைக்குரிய பிரச்னைகூட பல் வேறு சர்ச்சைகளை இஸ்லாமிய அறிஞர்களுக்கிடையே தோற்று வித்துள்ளதென்று சொன்னால் அது மிகையாகாது. உதாரணமாக இமாமுல் அஃழம் அபூஹனீபா ரஹிமஹுல்லாஹ் அவர்கள் ஒரு மனிதனில் அமைந்துள்ள ஈமானும் அமலும் வெவ்வேறு என்று கூறியதைக் கேட்ட அக்காலத்திய ஹதீஸ்கலை வல்லுனர்கள் இமாமவர்களை முர்ஜிய்யா என்று தீர்ப்பளித்தனர். அதன்பின் தாங்கள் அவ்வாறு தீர்ப்பளித்தது தவறு என்பதை அவர்கள் ஒப்புக்கொண்டு வாபஸ் பெற்றனர்.

இந்நிலையில் ஒரு மொழியை கொண்டோ அல்லது ஒலியை கொண்டோ விளக்கிக் காட்ட முடியாத ஞானத்தை மேற்கண்ட ஞானவான்கள் முடிந்தவரை சைக்கினையைக் கொண்டுதான் விளக்கிக்காட்ட முயன்றுள்ளனர் என்பது அவர்களின் நூல்களை ஞானத்தை அனுபவிப்பவர்கள் தெரிந்து கொள்வர். அதற்கு மாறாக நாங்கள் வஹ்தத்துல் உஜூதுடைய கொள்கையைச் சார்ந்தவர்களென வெளிக்காட்டிக் கொள்வோர், வஹ்தத்துல் உஜூத் என்றால் சிருஷ்டியும் சிருஷ்டிகர்த்தாவும் வெவ்வேறல்ல இரண்டுமே ஒன்றுதான். இரண்டுமே ஒன்றாக இருப்பதால் தான் ஷெய்குல் அக்பர் அவர்கள் **"அல் இன்ஸானு ஹுவல்லாஹ்"** "மனிதன் அல்லாஹ்வாக இருக்கிறான்" எனக்கூறி ஷெய்குல் அக்பர் அவர்களின் வார்த்தையை தங்களின் புத்திக்குத் தோதாக புரட்டுகின்றனர்.

இதில் மனிதன் அல்லாஹ்வாக இருந்தால் அவனது அப்தாகிய அடிமை எங்கே? எல்லாமே அல்லாஹ்வாக

இருந்தால் "**கஃபூருர் ரஹீம்**" என்னும் தன்மையை அல்லாஹ் எப்படி வெளிப்படுத்துவான்? யார்மீது வெளிப்படுத்துவான்? இது நிரீசகர்களின் கொள்கையாகும். இப்படி ஒரு வார்த்தையை ஷெய்குல் அக்பர் சொன்னர்கள். நாங்களெல்லாம் அவர்களின் கொள்கையை சார்ந்தவர்கள். அவர்களை நேசிப்பவர்கள் என்று சொல்வது அவர்கள்மீது காரி உமிழ்வதற்குரிய செயலாகும்.

இப்போது வாருங்கள்! இறையறிவை தனக்குள் கொண்டுள்ள மனிதனை நமது ஆய்வுக்கு எடுத்துக் கொள்வோம். மனிதன் என்பவன் இரண்டு பொருட்களின் கோர்வைகளுடைய தொகுப்பாகும். அதிலொன்று தேகம். இது மண், தண்ணீர், காற்று, நெருப்பு என்னும் பௌதீகங்களால் (பூத கணங்களால்) தொகுக்கப்பட்டுள்ளது. இவைகளின் தத்துவங்களைக் கொண்டு தான் மனித தேகம் செயல்படுகிறது. இந்த தேகத்திற்குரிய அறிவைத்தான் உணர்வு அல்லது சிற்றறிவு எனக் கூறப் படுகிறது. இதுதான் அடிமையாகும்.

மற்ருென்று உயிர் அல்லது நப்ஸாகும். இது மனிதனில் நான் என்னும் நினைவாக அமைந்துள்ளது. மேலும் இது மனித தேகத்தில் நுழைக்கப்பட்டதே அன்றி பௌதீகம் போன்ற பொருட்களிலிருந்து தோன்றியதல்ல. இதனை ஞானவான்கள் பேறறிவு என்றும் இர்பான் என்றும்கூட அழைக்கின்றனர். இன்னும் இது மனித தேகத்திற்கு சுல்தானுகும். அதேநேரம் இது சிருஷ்டியின் தரத்தை சேராது. பின்னும் இந்த நப்ஸுதான் இறை குணத்தை தன்னுடைய குணமாகக் கொண்டு இறைவனை அறிவதாகும். இதைத்தான் அல்லாஹுதஆலா,...

"**மனிதனை அல்லாஹ் தன்னுடைய தோற்றத்தில் (குணத்தில்) படைத்தான்**" (ஹதீஸெ குத்ஸி) என்றும்,...

"**மனிதனை அழகான தோற்றத்தில் அல்லாஹ் நிலை நிறுத் தினன்**" (சூரு-வத்தீன்) என்றும் கூறுகின்றவன்,...

"**பின்னர் அவனை தாழ்ந்த நிலைக்(மனித தேகத்திற்)குள் இறக்கினன்**" (சூரு-வத்தீன்) என்றும் கூறுகிருன்.

இதில் ஆன்மா இறை குணத்தை தனக்குரியதாகக்



கொண்டுள்ளதை போன்று தேகம் இறைவனுக்கு முற்றிலும் பொருந்தாத குணங்களை தனக்குள் கொண்டுள்ளது. ஆதலால் இறைவனுக்கு முற்றிலும் பொருந்தாத "**ஸிபத்துல் பஷரிய்யா**" என்னும் தற்புகழ்ச்சி, அகந்தை, கொலை, களவு, பொறுமை, சூது, முகஸ்துதி போன்ற தேகத்திற்குரிய குணங்களை தன்னை விட்டும் முழுமையாக நீக்குவதோடு தேகத்திற்குரிய சிற்றறிவு தனக் கென ஓர் சுயார்த்தமுண்டு என எண்ணிக் கொண்டுள்ள எண்ணத்தையும் அகற்றி தன்னை இறைவனுடைய தாக்கமும் செயலும் குணங்களும் வெளியாகும் ஒரு பாத்திரமாக, ஒரு கண்ணுடியாக, ஒரு வெளிப்பாட்டுக்குரிய துறையாக சிந்தித்து அனுபவித்து தெளிவானேயாயின் அந்நிலையில் அவன் தனது கற்பனையால் எண்ணிக் கொண்டுள்ள அவனது உஜூத் என்பது இல்லாமலாகி அவனது கைகள் இறைவன் பற்றுகிறவைகளாகி, அவனது கால்கள் இறைவன் நடக்கக் கூடியதாகி, அவனது கண்கள் இறைவன் பார்க்கக் கூடியதாகி, அவனது நாவு இறைவன் பேசக் கூடியதாக மாற்றம் பெற்று வஹ்தத்துல் உஜூத் என்பது சித்திக்கும். இதைத்தான் ஷெய்குல் அக்பர் அவர்கள் மனிதன் அல்லாஹ்வை வெளிப்படுத்திக் காட்டும் கண்ணுடியாக இருக்கிருன் என்பதை மனிதன் அல்லாஹ்வாக இருக்கிருன் என்று சொன்னர்கள். இதே கருத்தை மௌலா முஹம்மத் கௌஸ் ரஹிமஹுல்லாஹ் என்பார்,...

அறிந்தவர் நானென்று சொன்னல்
அவர்க் காதியருளுண்டாம்
மறந்தவர் நானென்று சொன்னல்
அவர் மாண்டிடுவார் வெந்த கரிபோல என்றும்,...

ஸெய்யிதுன கௌஸுல் அஃழம் அவர்கள்,...
அனத் தாகிருல் மத்கூரு திக்ரன் பி தாகிரா
அனஷ் ஷாகிருல் மஷ்கூரு ஷுக்ரன் பி நிஃமத்தி
என்றும் கூறுகின்றனர்.

மேலும் இறைவன் இதே கருத்தை ஹதீஸெ குத்ஸியில்,...

"**மனிதன் எனது ரகசியம் நான் அவனுடைய ரகசியம்**" என்றும் சொல்லிக் காட்டுகிருன்.

எனவே இன்று இஸ்லாமிய மக்களுக்கிடையே தம்மை தரீக்கத்வாதி என்றும் தாங்கள் வஹ்தத்துல் உஜூதுடைய கொள்கைவாதிகள் என்றும் கூறிக்கொண்டு வஹ்தத்துல் உஜூதுடைய கொள்கைக்கு பங்கம் ஏற்படுத்துவோரிடமிருந்து இச்சமூக மக்களை காக்கும் பொருட்டு இலங்கையைச் சேர்ந்த கண்ணியத்திற்கும் போற்றுதலுக்கும் மரியாதைக்கும் மகத்துவத்திற்கும் உரிய ஆரிபு பில்லாஹ் அல்லாமா **அஸ்ஸெய்யிது அப்துல் அஸீஸ் குஷ்ஹாலி** மத்தழில்லஹுல் ஆலி அவர்கள் வஹ்தத்துல் உஜூதைப் பற்றிய ஓர் தெளிவான இந்நூலை தொகுத்து தமிழ் கூறும் இஸ்லாமிய சமூகத்திற்கு மிகப்பெரும் பேருபகாரத்தை செய்துள்ளார்கள். அத்துடன் இந்நூலுக்கு ஏதுமறியாத எதற்குமே உதவாத கசடனை நான் அப்பெருந்தகை அவர்களின் அன்பான கட்டளைக்கேற்ப இம்மதிப்புரையை உங்களின் மேலான பார்வைக்கு தந்து அப்பெருமகனரின் நல்லாசியை வேண்டி யாசித்தவனுக முடிக்கிறேன். ஸல்லல் லாஹு தஆலா அலைஹி வஆலிஹி வஸஹ்பிஹி வஸல்லிம்.

பணிவுடன்,

**இப்ராஹீம் ரப்பானி**

# மதிப்புரை

ஸல்லல்லாஹு அலன் நபிய்யில் உம்மிய்யி ஸல்லல்லாஹு அலைஹி வ ஆலிஹி வஸல்லிம் அதத மா ஃபீ இல்மில்லாஹி ஸலாத்தன் தாயிமத்தன் பி தவாமி முல்கில்லாஹி வஅலா ஆலிக வ அஸ்ஹாபிக யா கைர கல்கில்லாஹ்.

மாத்தளை அந்நஜாஹ் அரபிக் கல்லூரி அதிபர், முனழிருஸ் ஸைலான் மௌலானு மௌலவி அல்ஹாஜ் ஏ. எல். முஹாஜிரீன் காதிரி ஸூபி வர்ரிபாயி அஸீஸி நத்வி அவர்களால் மனமுவந்து அளிக்கப்பட்ட மதிப்புரை

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால் ஆரம்பம் செய்கிறேன். எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே. அவன் தனது நேசர்களுடைய உள்ளங்களின் உட்புறங்களை தனது ஞானமென்னும் ஒளியைக் கொண்டு பிரகாசிக்க வைத்தவன். மேலும் தனது அன்பர்களின் வெளிரங்கங்களை அவர்கள் ஷரீஅத்தின் பாதையில் நடப்பதன் மூலம் அழகாக்கி வைத்தவன். இன்னும் அவர்களுக்கு வரிசைக் கீர்த்தியென்னும் ஆபரணங்களை அணிவித்து கீழ்த்தரம், அசுத்தம் போன்றவைகளை விட்டும் அவர்களின் உள்ளங்களை பரிசுத்தப்படுத்தி வழிகேடு எனும் இருளில் மக்களுக்கு வழி காட்டிடும் நட்சத்திரங்களாகவும் மடமையெனும் இருளில் மக்களுக்கு வழி காட்டிடும் சூரியனுகவும் ஆக்கி வைத்தவன்.

ஸலவாத் என்னும் கருணையும் ஸலாம் என்னும் ஈடேற்றமும் எங்களுடைய தலைவர் பாவிகளுக்குப் பரிந்து பேசுபவர் அகிலத்திற்கு அருட் கொடையாளர் அண்ணல் நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்கள் மீதும்

அவர்களின் கிளையார், தோழர்கள், தொடர்ந்தவர்கள், இறுதி நாள்வரை தொடர்பவர்கள் கண்ணியமிக்க இமாம்கள் நாதாக்கள் நல்லவர்கள் அனைவர் மீதும் உண்டாவதாக.

அன்பார்ந்த முஸ்லிம் சகோதரர்களே!

எனது வழிகாட்டிகளில் ஒருவரான அஷ்ஷெய்கு அல் அல்லாமா அல் ஆரிபுபில்லாஹ் அப்துல் அஸீஸ் மௌலானா குஷ்ஹாலி தவ்வலல்லாஹு ஹயாதஹு அன்னவர்களால் எழுதப்பட்ட இந்நூலை முழுமையாக நன்கு படித்துப் பார்த்தேன். இந்நூல் தற்காலத்தில் வஹ்ததுல் உஜூதை தவறாக விளங்கிக் கொண்டிருப்போருக்கு போதிய படிப்பினை ஊட்டக் கூடியதாகவும் வஹ்ததுல் உஜூத் என்ற ஒன்று இல்லை என்போருக்கு சாட்டையடியாகவும் தரீகத்தையும் பைஅத்தையும் மறுப்போருக்கு அறிவூட்டும் ஆதாரமாகவும் பைஅத்துப் பெற்றும் அதன்படி நடவாதோருக்கு நற்புத்தி கூறும் நூலாகவும் ஷெய்குல் அக்பர் முஹ்யித்தீன் இப்னு அரபி ரஹ்மதுல்லாஹி அலைஹி, அல் இமாம் கஸ்ஸாலி ரஹ்மதுல்லாஹி அலைஹி போன்ற சூபிய்யாக்களை குறைகூறும் குறை மதியாளர்களுக்கு வழிகாட்டுகின்ற நூலாகவும் சூபிஸமே இல்லையென வாதிப்போருக்கு வழிகாட்டும் அறநூலாகவும் அமைந்திருப்பதுடன் பைஅத்துப் பெற்ற முரீதுகள் தத்தமது ஷெய்குமார்களுடன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் விளக்கப்படுத்துகின்ற நன்நூலாகும்.

இந்நூல் எல்லா தரீகத்தையும் சார்ந்த முரீதீன்கள் வாசித்துப் பயனடைவதற்குரிய பொன்னூலாகும். இதனை எழுதிய ஷெய்கு நாயகம் அவர்களின் ஆயுளை நீளமாக்கி வைத்து இன்னும் பற்பல நூல்களை எழுதி வழிகேடு மடமையெனும் இருளில் தத்தளித்துக் கொண்டிருக்கும் சமுதாயத்தை ஒளியில் கொண்டுவர அல்லாஹ் அவன் தூதரின் பொருட்டால் உதவி செய்வானாக. ஆமீன்.

27-06-2004 — இவ்வண்ணம்,
ஞாயிற்றுக்கிழமை — ஏ. எல். முஹாஜிரீன்

# மதிப்புரை

உலமாவு இஷாஅதி அஹ்லிஸ் ஸுன்னா வழங்கிய
வாழ்த்துச் செய்தி

بسم الله الرحمن الرحيم

الحمد لله حمدا يرضاه لذاته. والصلاة والسلام على سيد مخلوقاته.
ورضي الله عن الصحابة والآل. واتباعهم من اهل الشرع والحال.
والسلام علينا وعلى عباد الله الصالحين.

ஜம்இய்யத்து இஷாஅதி அஹ்லிஸ் ஸுன்னா இந்நாட்டு இஸ்லாமிய சமூக மக்களுக்கு சமய கலாச்சார அறிவு ஒளியைப் பாய்ச்சிக் கொண்டிருக்கிறது. சாரதியற்ற வண்டியைப் போல தலைமைத்துவம் இல்லாது சென்று கொண்டிருந்த இம்மக்களுக்கு இதோர் வரப்பிரசாதமாகும். கழுவுகிற நீரில் நழுவுகிற மீனாகச் செயல்படுவோர்களுக்கு ஒரு பேராயுதமாகும். உலகத் தமிழ் முஸ்லிம்களுக்கு கொள்கை நெறியை செப்பனிடும் மீகாமாகத் திகழ்வது தற்செயல் நிகழ்வல்ல. இதுவொரு காலத்தின் தேவையாகும்.

பாமரர்களை விட ஆயிரக்கணக்கான அரபிக் கல்லூரி மாணவர்கள், உலமாக்களின் மடல்கள் கோபுரங்களை போல இதற்கு சான்றாக இருக்கிறது. சூபியாக்கள் தாகம் கொண்ட ஒரு அமைப்பாகவும் இருக்கிறது. இவ்வமைப்பின் சேவையில் இந்நூலானது ஒரு சமூகத்தின் ஈமானைப் பாதுகாத்திடும் ஒரு உந்து சக்தியாகத் திகழ்கிறது. இஸ்லாம் என்ற பெயரில் தோற்றுவிக்கப்பட்ட இயக்கங்கள் வெறும் கூட்டுறவுச் சங்கக் கடைகளை நடத்துகின்றன. இன உறவுகள், தெய்வீகத் தன்மைகள் செத்துப் போய்விட்ட இக்காலத்தில் இதன்

சேவையை பாராட்டுவதில் உள்ளம் பூரிப்படைகிறது. அத்துடன் இதில் சொல்லப்பட்டுள்ள சில கருத்துக்களை பற்றியும் குறிப்பிடலாமென்று நினைக்கிறோம். அதாவது,...

இந்நூலில் பைஅத் தொடர்பாக பேசுகையில், பைஅத்துப் பெற்றிடாதவன் வெற்றியாளனாக முடியாதென்று குறிப்பிடப் பட்டுள்ளது. அதற்காக அல்லாஹு தஆலாவையும் அவனது ரஸூல் நாயகம் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம வர்களையும் பரிபூரணமாக விசுவாசம் கொண்டு நல்லமல்கள் புரிபவன், அவன் பைஅத்துப் பெற்றிடாவிட்டாலும் ஜெயம் பெற்றவன் என்பதில் ஐயமில்லை.

இருந்த போதிலும் பைஅத் ஒரு சுன்னத்தான கருமமாக இருப்பதாலும் தற்காலத்தில் பைஅத்துப் பெற்றிருப்பதே உண்மையான அகீதாவைக் கொண்டவன் என்பதற்குரிய சான்றுதலாக இருக்கும் என்பதால் இப்படியாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. இன்னும் ஒருவருக்கு ஒரேயொரு ஷெய்கு தான் இருக்க வேண்டுமெனக் குறிப்பிட்டதெல்லாம் இக்கரைக்கு அக்கரை பச்சை அக்கரைக்கு இக்கரை பச்சையெனும் கணிப்பில் இருப்போர் ஏமாந்து விடாதிருக்கும் பொருட்டேயாகும்.

இன்னும் அல்லாஹு தஆலாவை காணலாம் என்று சொன்ன தற்காக ஜடவாதிகளின் கொள்கையைக் கொண்டோர் நாம் என்று கருதுதல் மகா தவறாகும். இன்னும் அல்லாஹு தஆலாவை காண முடியாதென்ற கொள்கையைக் கொண்ட மு.்.தஸிலாக்கள், ஜஹ்மிய்யாக்கள் தற்காலத்தில் இல்லையென்ற குறிப்பும் இருக்கிறது. இருந்தாலும் மௌலவி ஹஸன் சக்காப் அன்னவர்கள் (லா துத்ரிகுஹு ல் அப்ஸாரு) எனும் திருமறை வசனத்தையும் ஹழ்ரத் ஸெய்யிததுனா உம்முல் மு.்.மினீன் ஆயிஷா சித்தீகா ரழியல்லாஹு அன்ஹா அன்னவர்களின் தகவலையும்ஆதாரமாகக் கொண்டு ஈருலகிலும் அல்லாஹ்வைக் காணமுடியாதென்று சொல்கிறார்.

புகாரி, முஸ்லிம் உள்ளிட்ட இதுபற்றிய அத்தனை நபி மொழிகளையும் இவர் ஏற்க மறுப்பதுடன், அது தொடர்பான திருமறை வாக்கியங்களுக்கும் புது விளக்கம் தருகிறார். தனது கருத்தை நிரூபிக்க இவரால் எழுதப்பட்ட நூலே மஸ்அலா



அர்ருயா என்பதாகும். நம்மிடமிருக்கும் இந்நூலை ஹிஜ்ரி 2002ல் ஜோர்தான் நாட்டைச் சார்ந்த தாருல் இமாம் நவவியெனும் அமைப்பு வெளியிட்டிருப்பதுடன் அந்நாட்டு தாருர்ராஸி எனும் அச்சகத்தில் அச்சும் செய்யப்பட்டிருக்கிறது.

அல்லாஹ்வின் உதவியால் இவர் கருத்துக்களுக்கு தகுந்த பதில் சொல்ல நமது கவனம் திரும்பி இருந்தாலும் இவ்விடத்தில் முஹக்கிகும் முஹத்திதுமான கஷ்புல் கிபா நூலாசிரியர் அல்லாமா இஸ்மாயீல் அல் அஜ்லூனி ரஹிமஹு ல்லாஹ் என்பார் தமது நூலின் முன்னுரையில் பதிவு செய்துள்ள கூற்றை முன்வைக்க ஆசைப்படுகிறோம். அதாவது,...

ராவிகளின் அடிப்படையில் ஸஹீஹான ஹதீதென்று தீர்ப்ப ளிக்கப்பட்ட எத்தனையோ ஹதீதுகளை அடியேன் நபிகள் நாதர் கோமான் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர் களிடம் கேட்டபோது கூறிய பதிலிற்கமைய அதன்படி செயல் படுவதை விட்டு விட்டேன். இன்னும் ராவிகளை அடிப்படை யாகக் கொண்டு புறக்கணிக்கப்பட்ட எத்தனையோ ஹதீதுகள் பற்றி அடியேன் நபியவர்களிடம் கேட்டு அதன்படி செயல் பட்டிருக்கிறேன் என்று ஷெய்குல் அக்பர் ரழியல்லாஹு அன்ஹு அன்னவர்களால் புதூஹாத்துல் மக்கிய்யாவில் குறிப்பி டப்பட்டுள்ள ஒன்றே அக்கூற்றாகும். இதில் அல்லாமா அஜ்லூனி அன்னவர்களும் ஷெய்குல் அக்பரையும் அவரது நூல்களையும் ஏற்றுக் கொண்டவர் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

ஆக ராவிகளின் அடிப்படையில் இரு உலகிலும் அல்லாஹ்வை காண முடியும் என்பதை நிரூபிக்கும் ஹதீதுகள் இவர் சொல்வதைப் போல பொய்யானதாக இட்டுக் கட்டப்பட்டதாக இருந்திட்டாலும் .்.பிராஸத் - அகப்பார்வை உடைய பெரு மக்களான கஷ்புடைய நாதாக்கள், விசுவாசிகள் ஒவ்வொரு வரும் அவரவர் தகுதிக்கமைய ஈருலகிலும் அல்லாஹு தஆலாவை காண முடியும் என்று சொல்கிறார்கள்.

ஆதலால் அத்தகைய பெருமக்களின் தோழமை இவருக்கு இன்றியமையாததாகும். பெருமக்களின் தோழமை இன்றேல் செத்து மடிவது நல்லதெனும் இமாமுனா ஷாபியீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அன்னவர்களின் கூற்றுக்கமைய அதற்குரிய

ஏற்பாட்டைச் செய்து கொள்ளும்படியாக சகோதர வாஞ்சையுடன் இவருக்கு நஸீஹத் - உபதேசம் செய்கிறோம். இன்னும் பெருமக்களின் தோழமை அற்றிருப்போர், எத்துணை தான் அப்பெருமக்கள் சொன்னதாகச் சொன்னாலும் அக்கூற்றுக்களை கண்டு ஏமாந்து விடாதீர்கள்.

காரணம் பெருமக்களான ஷெய்குமார்கள் சொன்னதாகச் சொல்லப்படும் தகவல்கள் பல அவர்களால் சொல்லப்பட்டவைகள் அல்ல. அப்படி அவர்கள்தான் சொன்னார்கள் என்று ஊர்ஜிதமானால் அதற்குத் தகுந்த பொருள்கூறி விளக்கம் சொல்ல வேண்டும். மக்களுக்கு சொல்லத் தகுந்த விளக்கமற்ற ஒன்றாக அது இருப்பின் ஆரிபீன்களே அதன் உண்மை பொருளை அறிவார்கள் என்று நாம் ஒதுங்கிவிட வேண்டும். அவர்களது கருத்துக்கள் சுய நினைவில் சொல்லப்பட்டவைகள் அல்ல. ஆதலால் அக்கருத்துக்களை ஏற்க வேண்டிய கட்டாயம் அனைவருக்கும் உரித்தான ஒன்றுமல்ல என்று அல்லாமா யாபிஈ ரஹிமஹுல்லாஹ் என்பார் தமது அல் இர்ஷாத் எனும் நூலில் பதிவு செய்துள்ளார்கள். (அத்தஸவ்வுபுல் இஸ்லாமி பில் மக்ரிப், பக்கம்-35)

இன்னும் . ஷெய்குல் அக்பர் அவர்களின் கருத்துக்கள் தொடர்பாக பெருமக்கள் சொன்னதாக இந்நூலில் முன் வைக்கப்பட்டுள்ள பதில்கள் அக்கருத்துக்கள் விசுவாசியினது அகீதாவிற்கு உட்பட்டதாக இருக்க முடியாதென்பதையே தெளிவுபடுத்துவதாக நீங்கள் உணர்வீர்களாயின் அது அல்லாஹு தஆலா உங்களுக்குச் செய்த பேருதவியாகும்.

இன்னும் இதில் ஷெய்குல் அக்பர் அவர்களைப் புகழ்ந்திட்டோர் பற்றி குறிப்பிடுகையில் ஒருசில பெருமக்களின் பெயர்களையே குறிப்பிடப்பட்டுள்ளது. இல்லையென்றால் அப்பெயர்களும் அவர்கள் கருத்துக்களுமே தனிப்பிரதியாக அமைந்து விடும்.

சூபிய்யாக்களின் ஞானச் சொற்களை இமாம் கஸ்ஸாலி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் முதஷாபிஹத்தான வார்த்தைகளுக்கு ஒப்பிட்டுப் பேசுவதால் அச்சொற்களுக்கு நேரடிப்



பொருள் கொடுப்பதானது குப்ரிய்யத்தான செயலாகும். பின்னரும் தான் அறியப்பட வேண்டும் எனும் நோக்கத்திற்காகவே அல்லாஹுதஆலா சிருஷ்டிகளை சிருஷ்டித்தான் எனும் கூற்றின் அடிப்படையில் அவனை அறிந்திட முயற்சிக்கும் ஒருவராக நீர் இருப்பின் அதற்கான வழிமுறைகளும் சொல்லிக் கொடுக்கப்பட்டுள்ளது. உதாரணமாக,...

تفكروا في خلق الله ولا تفكروا في ذات الله.

**"அல்லாஹ்வுடைய தாத்தை பற்றி சிந்திக்காதீர்கள். அவனது படைப்பினங்களை பற்றி சிந்தியுங்கள்"** எனும் நபி மொழிக்கமைய படைப்புக்களின் எதார்த்தத்தை பற்றி சிந்திக்கின்ற போது படைத்தவனை அறிந்திடலாம்.

ஐவேளை தொழுகைகளையே சரிவர நிறைவேற்றிட நேரம் இல்லையென்று சொல்லிடும் சமுதாயமாக நாம் இருக்கும் போது நம்மைப் பற்றி சிந்திப்பது எப்பொழுது? இதற்காகவே அதற்கு உரித்தான பெருமக்களுடன் தோழமை கொள்ளும்படியாகவும் சொல்லி வருகிறோம். அப்படி யாராவது அதற்கு தயாரானால் தன்னைப் பற்றி அவன் சிந்திப்பது உசிதமல்ல. மாறாக நமது நாயகம் முஸ்தபா கோமான் நபிகள் பிரான் நாதர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைப் பற்றி சிந்திப்பதே சாலச் சிறந்ததாகும்.

والذي بعثني بالحق لم يعلمني حقيقة غير ربي.

**"அல்லாஹ்வின் மீது சத்தியமாக எனது அந்தரங்கத்தை எனது ரட்சகனல்லாத எவரும் அறியவில்லை"** (மதாலிவுல் மஸர்ராத், பக்கம்-129, ஷமாயிலே முஸ்தபா, பக்கம்-44) என்று நபிகள் நாதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களே கூறியிருப்பதால் நபியவர்களுடைய எதார்த்தம் பற்றியும் யாராலும் சிந்திக்க முடியாது போனாலும் அவர்களுடைய ஸிபாத்துக்கள் பற்றி சிந்திக்கலாமென்று யோசித்த போது,...

وكانت صفاته صلى الله عليه وآله وسلم الظاهرة لا تدرك حقائقها.

**"நபிகள் பெருமான் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் வெளிப்படையான ஸிபாத்துக்களின்**

அந்தரங்கமும் எத்திக் கொள்ளப்படாத ஒன்றேயாகும்'' எனும் அஸ்ஸிரத்துல் ஹலபிய்யா, பாகம்-3, பக்கம்-434லின் வாசகம் நபியவர்களின் ஸிபாத்துக்களை கூட முழுமையாக ஒருவராலும் அறியப்படாத ஒன்ருக இருப்பதை தெளிவுபடுத்தி விட்டது.

ولو سئلت أن أصفه ما أطقت لأني لم أكن أملأ عينيّ منه.

''நபிகள் நாதர் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களின் ஸிபத் - பண்புகளை சொல்லுமாறு யாராவது என்னிடம் கேட்டால் அதற்கு நான் சக்திபெற மாட்டேன். அன்னவர்களை நான் முழுமையாகக் காணவில்லை என்பதே அதற்குரிய காரணமாகும்'' என்ற ஹழ்ரத் ஸெய்யிதுனு அம்ர் பின் ஆஸ் ரழியல்லாஹு அன்ஹு அன்னவர்களின் அழகிய வார்த்தையானது ஸஹீஹ் முஸ்லிம், கிதாபுல் ஈமான், 54ம் பாடத்தில் பதிவாகியுள்ளது.

ஆக நபியவர்கள் நிகரற்ற மனிதப் புனிதர், அல்லாஹ்வின் மிகுந்த நேசத்திற்குரியவர், அல்லாஹுதஆலாவின் முதல் நபியும் இறுதித் தூதருமானவர் என்ற நம்பிக்கையில் அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கையில் நிலை கொண்டிருப்பதே ஒருவரின் வெற்றிக்கு வழி வகுக்கும். இவ்வவனியில் மனிதத் தோற்றத்தில் 63 ஆண்டுகள் உலவித் திரிந்த ஒருவரின் எதார்த்தம் ஒரு புறமிருக்க அன்னவர்களின் வெளிப்படையான பண்புகளையும் சரியாகப் புரிந்திட முடியாதிருக்கும் போது அன்னவர்களின் ரட்சகனை உன்னுல் அறிய முடியுமா? அதற்கு நீர் அருகதையான ஒருவரா என ஒரு கணம் சிந்தித்துப் பார்! நிச்சயமாக நாம் இது தொடர்பான விஷயங்களை அதற்கே உரித்தான பெருமக்களிடம் ஒப்படைத்து விட்டு அவர்களை பின் தொடர்வோம். அல்லாஹ் நமக்கு போதுமானவன்.

الهي نجني من كل ضيق    فانت الهنا مولى الجميع
وهب لي فى المدينة مستقرا    ورزقنا ثم دفنا فى البقيع.

இவ்வண்ணம்,
**இஷாஅத் அஹ்லிஸ் ஸுன்னு உலமாக்கள் குழு,**
25, போர்பஸ் லேன், மர்தானை, கொழும்பு - 9.

## تقريظ

كتبه : سماحة العالم الفاضل والاستاذ المحقق عبد القادر بن عثمان لبي البهجي المدير السابق بالجامعة الغوثية والاستاذ الاسبق بالبهجة الابراهيمية.

الحمد لله الذي يمن بجمع الاحباب فى الحيات وبعد الممات وجعل ذلك قرة لأعينهم وذخيرة للشفاعات والصلاة والسلام على سيدنا محمد صلى الله عليه وآله وسلم الفاتح باب الولاية لذوي الالباب ما اشرق شمس الطريقة لاهل السنة والجماعة وعلى آله وصحبه الذين بذلوا نفوسهم بالمجاهدات وبعد :

لقد وفقني الله على الوقوف على كتاب النظام الخاص لاهل الاختصاص الذي الفه الشيخ الواصل عبد العزيز مولانا الخوشحالى القادري والرفاعي دامت بركاته القدسية الذي يشير الى كشف الغموض الذي اخفى على اكثر علماء زماننا مكملا للفوائد ومفصلا لما اجمل ومعينا لاهل التدريس في سائر الاحوال ونـاداني لسان الانصاف ان اقول الحديث الذي رواه الترمذي من حديث عمرو بن شعيب ان الله يحب ان يرى اثر نعمته على عبده فاظهر المصنف متعه الله بطول الخدمة لاهل السنة والجماعة الابانة للحق والمحبة من الله ومن انفق من خزائن علمه لم يخش من ذوى العرش اقلالا ولقد علمت لدى الوقوف على الكتاب ان الباعث للمصنف متعه الله حياته على الاقدام لهذا الكتاب ثلاثة.

الاول : الاكثار من ذكر الصالحين مثل الشيخ القطب الربانى والغوث الصمدانى محي الدين عبد القادر جيلانى رضى الله تعالى عنه والشيخ ابى الحسن على الشاذلي والشيخ احمد كبير الرفاعي رضى الله تعالى عنهما والشيخ الاكبر محي الدين ابن عربي قدس سره وامثالهم رضوان الله تعالى عليهم كما في حديث انس بن مالك رضى الله تعالى عنه ان رجلا من الاعرابي سئل رسول الله صلى الله عليه وآله وسلم متى الساعة فقال رسول الله صلى الله عليه وآله

وسلم ما اعددت لها قال ما اعددت لها كبير صلاة وفى رواية كثير صلاة ولا صيام ولا صدقة الا اني احب الله ورسوله فقال رسول الله صلى الله عليه وآله وسلم المرأ مع من احب رواه الترمذى. ففى الحديث معان : منها ان الحب مع المحبوب سبحانه وتعالى والحبيب الاعظم صلى الله عليه وآله وسلم يزيدان ويزيدان و ............ حتى يصير العبد لا يعرف جسمانه ولا معيشته رباني هو متصرف في تصرفات في انحاء العالم ويكون في سكرة المحبة دائما كما جرى فى الشيخ الواصل الكامل المشهور فى الزهد والولاية الشبلي رحمة الله عليه ويحكى ان الشبلي دخل على الجنيد البغدادي رحمة الله عليه بيته في حال سكر المحبة وزوجة الجنيد البغدادي رحمة الله عليه جالسة فلما رأته بادرت الى تغطية رأسها فقال لها الجنيد رحمة الله عليه لا عليك ليس هو حاضرا فصفق الشبلي رحمة الله عليه على رأس الجنيد رحمة الله عليه وأنشأ يقول :

عودني الوصال والوصل عذب
ورموني بالهجر والهجر صعب
زعموا حين اعتبوا ان جرمي
فرط حبي لهم وذلك ذنب
لا وحسن الخضوع عند التلاقي
ما جزاء من يحب الا يحب

حياة القلوب في كيفية الوصول الى المحبوب ٢-٢٧٣.

الثانى : انتفاع المريدين والمحبوبين بالنبي صلى الله عليه وآله وسلم وبالشيوخ وقد قال رسول الله صلى الله عليه وآله وسلم في حديث رواه المسلم من سن سنة حسنة كان له اجرها واجر من عمل بها فالشيخ عبد العزيز مولانا الخوشحالى القادري والرفاعي دامت بركاته وفاضت قدسيته على مريديه ومحبيه وعلى ذوى الارباب كلهم.

والثالث : حث النفس على السلوك في طريق اهل السنة والجماعة ومجاهدة النفس كما قال الله تعالى والذين جاهدوا فينا لنهدينهم سبلنا وانه سن سننا كثيرة بليغة مثل تأليف الكتب ومجالس الذكر ومجالس السماع باناشيد تحث نفوسا على الالتذاذ بها والشوق الى محبته الحبيب الاعظم صلى الله عليه وآله وسلم والاحباب ذوى الارباب والارشاد فيما رواه البخارى ومسلم ليس الشديد بالصرعة وانما الشديد الذي يملك نفسه عند الغضب وكما قاله صلى الله عليه وآله وسلم رجعنا من الجهاد الاصغر الى الجهاد الاكبر فالشيخ عبد العزيز مولانا الخوشحالى القادري والرفاعي كثيرا ما يذكر



علوم التصوف وعلوم الفتوحات الربانية والذين فتح عليهم من الفيوضات الالهية كانه عرف ثم عرف مع ان العلماء بل واكثرهم لم يكن عندهم ادنى فهم وادنى علم بهؤلاء الكرام وفتوحاتهم واسرارهم مع الاله كما قال العارف بالله رحمة الله اولياء الله لا يعرفهم الا امثالهم روح البيان ٢-٦٠.

وقال في تفسير روح البيان ٩-٥٦ كانت رابعة العدوية رضى الله عنها تصلى فى اليوم والليلة الف ركعة وتقول ما اريد بها ثوابا ولكن ليسر بها رسول الله صلى الله عليه وآله وسلم وورد الشيخ عبد العزيز مولانا الخوشحالى افاض الله علينا من بركاته ردا باتا حتى لا يرفع المنكرون والملحدون الذين يقولون ان الولاية والنبوة لا يكونان فى الصغر واعطى الشيخ عبد العزيز مولانا الخوشحالى افاض الله علينا من بركاته درسا لهم ليس ما قال الا ما قال فى التفسير روح البيان ٤-٢٢٤ ان الولاية والنبوة لا يتوقف على البلوغ وعلى الاربعين.

فيا حبذا من زيادة فرحي حتى كدت ان اطير فرحا عندما رأيت الشيخ عبد العزيز مولانا الخوشحالى يوصي مريديه باتباع الشرع تماما وتخلية من لا خلاق له وليس الا كما قال العارف بالله عمر ابن عبد القادر القاهرى رضى الله عنه

خل خلى خلة الخذلان خوف الخاتمة
خالل خليلا خاملا الوصف من الخلخال خال
دم دوام الدهر دائم الحضور والشهود
دمت فى جنات وصل حالة الابدال دال

فعلى الجملة كل ما قال الشيخ عبد العزيز مولانا الخوشحالى في كتابه منقول من الكتب المعتمدة بلا شك فليقبل من يقبل ولا نلتفت الى المنكرين والوهابين المتسمين بالتوحيد فما ذا يقول المنكرون لعبارة حاشية الشروانى على التحفة بشرح المنهاج ٢-٣٥ ان نقط المصحف وشكله فانه بدعة ايضا لكنه سنة بجيرمي وما ذا يقولون في عبارة تفسير روح البيان للشيخ اسمائيل الحق البروسي ٩-٥٦ وقد قال ابن الحجر الهيتمي رحمة الله عليه ان البدعة الحسنة متفق على ندبها وعمل المولد واجتماع الناس له كذلك وما ذا يقول المنكرون عن قول الشيخ الاكبر محى الدين بن عربى قدس سره في حال جذبته :

يا غاية السؤل والمأمول يا سندي
شوقي اليك شديد لا الى احد
ونظرة منك يا سؤلي ويا أملي
اشهي الي من الدنيا وما فيها

الا واحجبا من عدو حاسد
بحق شماح اسماخ سلمت سمت
وخلصنا من كل هول وشدة
بنص حكيم قاطع السر اسلمت
واصم وابكم ثم اعم عدونا
واخرس هموا يا ذا الجلال بحوسمت
وفي حوسم مع دوسم وبراسم
تحصنا بالاسم العظيم بحوسمت.

# முன்னுரை

வாசக நெஞ்சங்களின் கவனத்திற்கு,...

بسم الله الرحمن الرحيم وبه نستعين

الحمد لله الذي فتح لأوليائه ابواب كنوز معرفته وذكره ورفع عنهم الحجب واطلعهم على دقائق اسرار نعمته وجذبهم وازال عنهم ستور الجلال وناسوت ربوبيته واكرمهم بفيض كرمه وآلاته وافاض على قلوبهم بحار التوحيد فتفجرت مناهل الحكمة على السنتهم والصلاة والسلام على حبيب المحبب نور الانوار وسر الاسرار وترياق الاغيار ومفتاح باب اليسار سيدنا ومولانا محمد صلى الله عليه وآل بيته الاطهار وصحابته الاخيار. اللهم صل عليه الذي هو ابهى من الشمس والقمر وصل وسلم عليه الذي جمعت به اشتات النفوس ونبيك الذي نورت به ظلام القلوب وحبيبك الذي اخترته على كل حبيب وعلى آله وصحبه ومن تبعه الى يوم الدين.

اول الدين معرفة الله.

''அல்லாஹுத்தஆலாவை அறிவதே மார்க்கத்தின் முதல் அம்சமாகும்'' என்பது கருணைக் கடல் காத்தமுன் நபி திங்களெங் கோமான் நபிகளெம் பிரான் ரஊபும் ரஹீமுமான முஹம்மத் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் அருள் மொழியாகும். இதனாலேயே அல்லாஹ்வை பற்றியும் அவனது அஸ்மா ஸிபாத்துக்களை பற்றியுமுள்ள விளக்கங்களை தெரிந்து கொள்வது அறிவுகளிலெல்லாம் மிகச் சிறந்த அறிவாக இருக் கின்றது. இந்த அறிவைத்தான் இல்முல் உஸூல் என்றும் இல்முத் தௌஹீத் என்றும் இல்முல் அகீதா என்றும்

சொல்லப்படுகிறது. இல்முல் கலாம் என்பதும் இதற்குரிய பெயர்களில் ஒன்றாகும்.

இக்கல்வியில் ஆழமான அறிவைப் பெற்றிராதவர் தன்னையும் அறியாமலேயே பெரும் பாவத்தில் சிக்கி இறக்கும் அபாயகரமான நிலை தோன்றும். இவ்வறிவின் பாக்கியமற்றோரது இறுதி முடிவு ஆபத்துக்குரியதாக முடியலாம் என்னும் எச்சரிக்கைகள் ஒரு பயத்தை ஏற்படுத்தினாலும் இந்த அறிவைக் குறித்து பேசிய ஞானவான்களை உண்மைபடுத்தி அவர்களின் கூற்றுக்களை ஏற்றுக் கொள்வதே கிடைத்தற்கரிய பேறுகளில் ஆகக் குறைந்த பேறாகும் என்னும் ஆறுதலுக்குரிய வார்த்தை உள்ளத்திற்கு ஒரு அமைதியை தருகிறது. ஏனெனில் இந்த அறிவுகளை (கல்க்) என்னும் பாமரர்களால் ஜீரணித்துக் கொள்ள முடியாதென்பதே இதற்குக் காரணமாகும். அதனால்தான் சுன்னத் வல் ஜமாஅத்தைச் சார்ந்த மக்கள் ஞானவான்கள் கூறியதாக சொல்வதை கேட்டு உலமாக்களின் மீதுள்ள நம்பிக்கையில் அவைகளை கொஞ்சம் கூட அலசி ஆராயாது அப்படியே ஏற்றுக் கொண்டு விடுகின்றனர். இது அப்பாமர மக்களின் ஈமானுக்கே இப்போது உலை வைத்து விட்டது.

இந்த அறிவில் முழுமையான ஞானமுடைய நமது நாயகம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு நிகர் அவர்கள் தானென்றால் அது மிகையாகாது. இதுபற்றி,...

انا اعلمكم بالله واخشاكم له.

"நானே அல்லாஹ்வை நன்கு அறிந்தவனாகும். மேலும் நானே அவனை அதிகமதிகம் அஞ்சுபவனுமாகும்" என்பதாக அவர்களே கூறுகின்றனர்.

அல்லாஹ்வை, அல்லாஹ்வைக் கொண்டே அறிந்து கொண்ட அருமை நாயகம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களும் அவர்களை முழுமையாகப் பின்பற்றும் நல்லோர்களும் அவனை அஞ்சி அவனது கட்டளைகளுக்கு தம்மை அர்ப்பணித்துக் கொண்டதற்கு சான்றுகள் ஏதும் தேவையில்லை.



"அல்லாஹ்வை அஞ்சுங்கள். அவன் உங்களுக்குக் கற்றுத் தருவான்" எனத் திருமறையும் "அல்லாஹ்வை அஞ்சுவதே ஞானத்தின் திறவு கோலாகும்" என நபிமொழியும் கூறிக் கொண்டிருப்பதால் அவனது கட்டளைகளை செவ்வனே நிறை வேற்றுவதே அதற்குரிய வழியாகும். அதேநேரம் அதற்குரிய வழிகாட்டிகளாக இருப்போர் ஞானத்தை பெற்ற சூபிய்யாக்களாகும். ஆதலால் காமிலான ஒரு ஷெய்கின் கரத்தை நாம் பற்றிப் பிடிக்க வேண்டும். நாம் எவருடைய கரத்தை பற்றிப் பிடிக்க நினைக்கிறோமோ அவர் (ஷெய்க்) எத்தகையவராக இருக்க வேண்டும் என்பதற்குரிய சில குறிப்புக்களை இதில் உள்ளடக்கி இருக்கிறோம். இதைப் பார்த்த பிறகும் ஒரு ஷெய்குடைய கரத்தை பற்றிப் பிடிக்காது இருப்பீர்களாயின் இந்த நூற்றாண்டை பொறுத்தவரை யார் கூறும் விளக்கம் சரியான தென்பதை உங்களால் புரிந்துகொள்ள முடியாது தவித்துப் போய் விடுவீர்கள் என்பதில் ஐயமில்லை.

இஸ்லாமிய மார்க்கத்தின் மிக முக்கியமான மூலாதாரக் கொள்கையாகிய இந்த விஷயத்தை தெரிவித்துக் கொடுப்ப தற்காக அவனால் அனுப்பப்பட்டவர்களே ரஸூல்மார்களாகும். அந்த ரஸூலின் கருத்துக்களுக்கு பேராசிரியர்களாக இருப்ப வர்கள் தான் நபிமார்களாகும். இருந்தும் அவனைக் குறித்த முழுமையான அறிவைப் பெற்றுள்ள நபிமார்களாகவும் ரஸூல் மார்களாகவும் இருப்போருடன் இறைவன் உரையாடுவதைப் பற்றி சொல்லும்போது,...

"வஹியின் வாயிலாக அல்லது தனக்கு வழிப்பட்ட தூதர் ஒருவரை அனுப்புவதன் வாயிலாக அல்லது திரைக்கப்பாலிருந்தே ஒழிய எந்தவொரு மனிதனுடனும் அல்லாஹுதஆலா பேசியதில்லை. நிச்சயமாக அவன் உயர்ந்தவன். ஞானமுடையவன்" என்பதாக அவனே தனது மாமறையில் சொல்லிக் கொண்டிருக்கிறான்.

ஆதலால் மகத்துவமிக்க அல்லாஹுதஆலாவைப் பற்றிய ஞானத்தை பெற விரும்புவோர் அதனை நபிமார்களின் வாரிசுகளாகிய உலமாயே ரப்பானிய்யாக்களாகிய சூபிய்யாக்களின்

மூலமே பெற முடியும் என்பதை மறந்து விடாதீர்கள். இவர்களே இப்பிரபஞ்சத்தின் நல்லாசிரியர்களாகும். ஆகையால் முதலில் அப்படிப்பட்ட ஞானவான்களை அடையாளம் கண்டு அவர்களின் தோழமையை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். மேலும் காமிலான சூபிய்யாக்கள் உங்களுக்குக் கிடைக்கா விட்டாலும் அல்லது அத்தகையோர் தற்போது இல்லையென்று சொன்னாலும் அல்லது ஒருவருடைய முரீதாக நீங்கள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் உலமாக்களுடைய உபதேசத்தைக் கொண்டோ அல்லது அதைப்பற்றிய கருத்துக்களடங்கிய நூல்களை பார்ப்பதன் மூலமாகவோ நீங்கள் தெரிந்து கொள்ளலாமென்று நினைப்பீர்களாயின் அது வழிகேட்டுக்கு அடிகோலி விடும்.

واعلم ان هذا العلم الذي ذكرنا ليس هو اللقلقة باللسان وانما هو
اذواق ووجدان ولا يؤخذ من الاوراق وانما يؤخذ من اهل الاذواق
وليس ينال بالقيل والقال وانما يؤخذ من خدمة الرجال وصحبة
اهل الكمال والله ما افلح من افلح الا بصحبة من افلح.

"அறிந்து கொள்! திடனாக நாம் குறிப்பிட்ட அறிவானது பிரச்சாரத்தின் வாயிலாகக் கிடைக்கும் ஒன்றல்ல. காகிதங்களிலிருந்து எடுக்கப்படுவதுமல்ல. அவர் சொன்னார், அதில் கூறப்பட்டுள்ளது எனக்கூறி பெற்றுக் கொள்ளப்படும் ஒன்றுமல்ல. மாறாக அந்த அறிவானது அனுபவத்தை கொண்டே பெற்றுக் கொள்ளப்படும் ஒன்றாகும். (அந்த அனுபவம் கிடைக்க வேண்டுமாயின்) கமாலிய்யத்தென்னும் பூரணத்துவத்தை அடைந்த ஞானவான்களின் தோழமையை பெற்று அவர்களுக்கு ஊழியம் செய்வதன் வாயிலாக பெற்றுக்கொள். அல்லாஹுதஆலாவின் மீதாணையாக ஜெயமடைந்தோரின் தோழமையின்றி யாருமே இப்பாதையில் வெற்றி பெற்றதில்லை" என்று,...

ولو كانت الصلاة تجوز بغير القرآن لجازت بكلام الحكم.

"திருமறையல்லாத ஒன்றை ஓதினாலும் தொழுகை நிறைவேறி விடும் என்றிருந்தால் அல் ஹிகம் என்னும் நூலின் வார்த்தைகளே அதற்குப் போதுமானதாகும்" என்பதாக எகிப்திலுள்ள இஸ்கந்தரிய்யாவைச் சேர்ந்த அல்லாமா இப்னு அதாவுல்லாஹ்



ரஹிமஹுல்லாஹ் அவர்களின் நூலாகிய அல்ஹிகம் என்பதற்கு விரிவுரை செய்த அல்லாமா இப்னு அஜீபா ரஹிமஹுல்லாஹ் என்பார் கூறுகின்றனர். மேலும் 'லா யஃரிபு கலாமல் ஆரிபி இல்லல் ஆரிபு' ஆரிபான ஞானிகளின் வார்த்தைகளை ஆரிபல்லாதவர் அறிய மாட்டார் என்பதும் ஞானவான்களின் தீர்ப்பாகும். இதற்கொப்ப இன்னார் தான் இதற்குத் தகுதியானவரென்று நீங்கள் நினைப்பீர்களாயின் அவருக்குரிய தகுதியையும் தன்மைகளையும் இந்நூலின் வாயிலாகத் தெரிந்து கொள்ள பேரருளாளனாகிய அல்லாஹ்வின் மேலான நல்லுதவியை நாடுகிறோம். ஆனால் என்னவென்று சொல்வது! ஆலையில்லா ஊருக்கு இலுப்பை பூ சர்க்கரையான கதையாகி விட்டது.

அடுத்து மேற்கூறப்பட்ட விஷயத்தை ஏட்டுப் படிப்பால் புரிந்துகொள்ள முயற்சித்தது மட்டுமின்றி அக்கருத்துக்களை தெரியாதிருப்போரும் புரியாதிருப்போரும் அக்கல்வியின் தொடர்பில்லாதோரும் மாபெரும் குற்றமிழைத்தோர் என்னும் விஷமத்தனமான பிரச்சாரம் நமக்கு நினைவூட்டும் பிரதானமான விஷயம் என்னவெனில்,...

اذا وسد الامر الى غير اهله فانتظر الساعة.

"தகுதியில்லாத ஒருவரிடம் ஒரு காரியம் ஒப்படைக்கப்பட்டால் இறுதிநாளை எதிர்பாருங்கள்" என்பதும் நாயகம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் அருள் மொழியேயாகும்.

இது ஒரு பக்கமிருக்க நாங்கள் கூறும் கருத்துக்களுக்கு குர்ஆனிலும் ஹதீதிலும் மிகத் தெளிவான, விரிவான, வெளிப்படையான, அசைக்கவியலாத, வலிந்துரைக்கு உட்படாத, ஆணித்தரமான ஆதாரங்கள் எங்களிடம் இருக்கின்றதெனக் கூறுவோருக்கு நாம் சொல்வது இதுதான். குர்ஆனாக இருந்தால் அதற்குரிய வேத வியாக்யானிகள் அந்த விளக்கத்தை சொல்லியிருக்க வேண்டும். அல்லது ஹதீதாக இருப்பின் அதற்குரிய விரிவுரையாளர்களால் விளக்கமளிக்கப்பட்டிருக்க வேண்டும். அத்துடன் அக்கருத்துக்கள் உலக அரங்கில் ஏற்றுக் கொள்ளப்

பட்டதாகவும் இருப்பதோடு ஒரு தனி மனிதரின் தீர்ப்பாக இருக்கவே கூடாதென்பது சுன்னத் வல் ஜமாஅத்தினரின் கொள்கை விளக்கமாகும்.

எனவே நாம் திரும்பத் திரும்ப கூற விரும்புவது என்ன வென்றால் நம்மில் யார் வேண்டுமானாலும் எதையும் சொல்லலாம், எழுதலாம், பிரச்சாரம் செய்யலாம், போராடலாம், அதற்கு ஆயிரக்கணக்கானோர் ஆதரவாளர்களாகவும் இருக்கலாம். அரசின் அங்கீகாரத்தை பெற்றதாகக் கூட இருக்கலாம். ஆனால் பொய் ஒருபோதும் மெய்யாகாது. உண்மை காலமெல்லாம் உறங்கிக் கொண்டும் இருக்காது. சீப்பை கண்டால் கல்யாணம் நின்றுபோய் விடும் என்று நம்புவது முட்டாள்தனம் என்பதைப் போல மிரட்டலைக் கண்டு சத்தியம் தனது வாயை மூடிக் கொண்டு விடும் என்னும் நம்பிக்கையும் முட்டாள் தனமானதாகும்.

அல்லாஹ்வின் நல்லடியார்களே! சுன்னத் வல் ஜமாஅத்தின் மீது அபிமானமும் நம்பிக்கையும் கொண்டிருப்போரே! இந்த நூலில் உங்களில் யாருடைய உள்ளமும் வேதனைப்படும் விதமாக சொல்லப்பட்டிருப்பதைக் கண்டால் அதனை அல்லாஹ் ரஸூலுக்காக மன்னிக்குமாறு சகோதர வாஞ்சையோடு கேட்டுக் கொள்கிறோம். குறிப்பிட்ட சிலருக்கு இந்த நூல் எதிராக இருக்கின்றதென அறவே நினைக்காதீர்கள். அதேநேரம் அதைச் சார்ந்த சகோதரர்கள் தமது பிடிவாதங்களை விட்டு விட்டு தம்மிடம் காணப்படும் அறிவென்னும் அமானிதத்தை உரிய முறையில் தகுந்த இடத்தில் பிரயோகித்து சுன்னத் வல் ஜமாஅத்தின் சத்தியக் கொள்கையை பாதுகாக்க உழைக்க முன்வருமாறு உபதேசிக்கிறோம். நாம் ஒவ்வொருவரும் நம்மை நாமே திருத்திக் கொள்வோமாக. அத்துடன் கடந்தகால நமது பிரசுரங்களில் ஏற்பட்டுப் போன தவறுகளுக்காக வாசகர்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறோம். கோபத்தோடு பார்ப்பீர்களாயின் நிரபராதி கூட குற்றவாளியாகத் தான் தெரிவான். அதைவிட்டு அனுதாபத்தோடு பார்ப்பீர்களாயின் குற்றவாளியும் நிரபராதியாகி விடுவான். எனவே நடுநிலையோடு சிந்திக்க என்பதற்கொப்ப இந்த நூலில் சொல்லப்படும் கருத்துக்களை பாரபட்சமின்றி சிந்தித்து முடிவெடுங்கள்.



தன்னை உண்மையாளரென்றும் தான் சொல்வது மட்டும் தான் உண்மையென்றும் நம்பிக் கொண்டுள்ள மக்கள் மத்தியில் பொய்யான தகவலைக் கூறுவது மிகப்பெரும் துரோகத்திற்குரிய செயலாகும் என்னும் நாயகம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் அருள்மொழி (மிஷ்காத்-413) அபூதாவூதில் கூறப்பட்டுள்ளது. மேலும் **'எனது உம்மத்திலுள்ள எல்லோரையும் விட பேச்சாற்றல் மிகுந்த நயவஞ்சகர்களை குறித்தே நான் அதிகமாக அஞ்சுகிறேன்'** என்னும் பொன் மொழியானது முஸ்னத் அஹ்மத் என்னும் நூலின் 143ல் பதிவாகியுள்ளது.

இந்நூலானது எனது மதிப்புக்குரிய பாட்டனரான அல் வலிய்யுல் அஜல்லு வல் அலமுல் அத்வலு பஹ்ருல் மஆரிபி வ கன்ஸுல் அவாரிபி ஷெய்குல் மஷாயிகி குத்புல் அக்தாப் ஸாஹிபு யதில் பைழாஇ ஷரீபுல் ஹஸபைன் மௌலானா அஸ்ஸெய்யிது அஷ்ஷெய்கு அஹ்மத் கபிருர் ரிபாயிய்யி அல் பதாயிகிய்யி ரஹிமஹுல்லாஹ் அவர்களின் 'அந்நிழாமுல் கவாஸ்ஸு லி அஹ்லில் இக்திஸாஸி' என்னும் நூலிலிருந்து அருளை நாடி சில விஷயங்களை இந்த நூலில் உள்ளடக்கி அப்பெயரையே இந்த நூலுக்கும் பெயராகச் சூட்டியுள்ளேன். இதுபோன்றே அறிஞர்களான ஞானவான்களின் கருத்துக்களை எடுத்துச் சொல்லும்போது அவைகளில் சில கருத்துக்களை சேர்த்திருக்கிறோம். ஆதலால் இக்கருத்தை இவர் சொல்லவில்லையே என்னும் யோசனை வேண்டாம்.

யா அல்லாஹ்! உனது ஹபீபின் பொருட்டால் இச்சிறு பணியை ஏற்று சமூக மக்கள் பயனடையச் செய்வாயாக. உனது நேசத்தை பெற்ற நல்லோரின் தோழமையில் இரு உலகிலும் வாழ்வதற்கு தௌபீக் செய்வாயாக. ஆமீன் பிஜாஹி தாஹா ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி வஸல்லிம்.

وان تجد عيبا فسد الخللا
جل من لا له عيب وعلا
وما بها من خطإ ومن خلل
أذنت في إصلاحه لمن فعل

لكن بشرط العلم والانصاف
فاذا من اجمل الاوصاف
والله يهدي سبل السلام
سبحانه بحبله اعتصام.

بسم الله الرحمن الرحيم

الحمد لله الموصوف بوحدة الوجود على ما تعرفه اهل العناية والشهود لا على المعنى الفساد الذي عند اهل الالحاد والزندقة واهل الانكار والجحود لان كل شيئ من جهة نفسه معدوم مفقود وانما هو لوجود الله تعالى موجود والصلاة والسلام على سيدنا ونبينا ومولانا وحبيبنا وشفيعنا وملاذنا وقاسم ارزاقنا محمد صلى الله عليه الذي فتح الله بانوار متابعته كل باب مسدود لمن حافظ على الاحكام الشرعية واقام الحدود. اللهم صل عليه وعلى آله
عدد من صلى عليه وعدد من لم يصل عليه صلاة
دائمة بدوام ملك الله.

இந்த நூற்றாண்டில் வாழும் மனிதர்கள் அல்லாஹ்வையும் அவனது ரஸூலையும் மறுப்போர்(காபி)ர்களால் புதிது புதிதாகக் கண்டுபிடிக்கப்படும் சாதனங்களைக் கண்டு ஆச்சரியப்படுவோராக பெருமை பாராட்டித் திரிவோராக இருப்பதை நாம் பார்க்கிறோம். மனித அறிவால் கண்டுபிடிக்கப்படும் சாதனங்களை கண்டு மனித இனமே மயங்கிக் கிடக்கும் இக்காலத்தில் அக்காபிர்களால் கண்டுபிடிக்கவே முடியாத ஆற்றலையெல்லாம் ஒரு முஃமின் தனக்குள் கொண்டிருக்கிறான் என்னும் ஆதாரத்தை நாம் குர்ஆன் ஹதீஸைக் கொண்டு நிரூபித்தால் பெருமிதப்பட்டு ஆரவாரம் செய்ய வேண்டிய மனிதன் தற்பெருமை, பொறாமை, பேராசை, ஆணவம் போன்ற கொடிய வியாதிகளின் தாக்கத்திற்குள்ளாகி தவியாய் தவித்துக் கொண்டிருக்கிறான்.

நாம் ஏன் பிறந்தோம்? நமது பிறப்பால் என்ன பிரயோஜனம்? என்றெல்லாம் மனிதன் யோசிக்கிறானே அன்றி நாம் எதற்காகப்

பிறந்தோம்? நம்மை இறைவன் படைத்ததன் நோக்கமென்ன? என்பதையெல்லாம் சிந்தித்துப் பார்க்காமல் இருப்பது ஒரு புறமிருக்க, அப்படிப்பட்ட யோசனைகளெல்லாம் தனக்குத் தேவையற்ற ஒன்றென்றும் நினைக்கிறான். இதுபற்றி இறைவன் நம்மை விளித்து, **"நீங்கள் வீண் விளையாட்டுக்காக படைக்கப் பட்டுள்ளீர்கள் எனக் கருதுகிறீர்களா?"** என்றும் கேட்கிறான்.

இந்த வசனப்படி மனித சமுதாயம் வீண் விளையாட்டுக்காக படைக்கப்படவில்லை என்பதும், அதற்குரிய காரணம் வேறு என்பதையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். இதை உணர்ந் துள்ள நன்மக்களோ தம்மை அவ்வழியில் அர்ப்பணித்து விட்டதோடு அதில் சுகம்காணவும் துவங்கி விட்டனர்.

அடுத்து இவ்வுலகிலுள்ள எந்தப் பொருளை எடுத்துக் கொண்டாலும் அவைகளில் உட்புறம் என்றும் வெளிப்புறம் என்றும் இரு வகையான நிலைகளை அவைகள் கொண்டிருப்பதை நாம் பார்க்கலாம். இதில் இறைவனது அருள் வேதமாகிய திருக்குர்ஆனுக்கு மேற்கண்ட இரு நிலைகளும் இருக்கின்றது என்பதை ஏற்க மறுக்கும் மனிதன் தானும் இவ்வாறே இரு நிலைகளை கொண்டிருப்பவன் என்பதை எடுத்துச் சொன்னால் அதை அவன் ஏற்றுக் கொள்வானா என்பது இன்று கேள்விக் குரியாக உள்ளது. மனிதனே! உன்னிடம் அல்லாஹ்வைக் கொண்டு அமானிதமாக வைக்கப்பட்டுள்ள அறிவின் திறமையால் வெளிப்படும் சாதனங்களைக் கண்டு உன்னைப் போன்ற ஒருவன் தான் பாராட்டுவானேயன்றி உனது ரட்சக னல்ல. ஆனால் நீ உன்னைப்பற்றி சிந்தித்து நானும் ஒரு கருவி தான் என்பதை உலகுக்குத் தெளிவுபடுத்துவாயாகில் அப்போது தான் அந்த உள்ளமைக்குரிய தோற்றவாளனின் பாராட்டை பெறுவாய். அத்துடன் உனக்குள் மறைந்து கிடக்கும் உண்மை களையெல்லாம் நீ வெளியே கொண்டுவர முயற்சிப்பாயானால் உலக அதிசயங்களெல்லாம் உனது பார்வைக்கு அற்பமாகிப் போய்விடும்.

இன்றோ அல்லது நேற்றோ பிரபல்யமான விஞ்ஞானம் லட்சக் கணக்கான புதுப்புது கண்டுபிடிப்புக்களை உலக சந்தையில் கொண்டுவந்து நிமிடத்திற்கு நிமிடம் அறிமுகப்படுத்திக்



கொண்டே இருக்கிறது. பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருப்பவரோடு தொடர்பு கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது விஞ்ஞானம் தான். அப்படியானால் விஞ்ஞானம் தோன்றுமுன் வாழ்ந்தோரது நிலை என்ன? அவர்க ளால் அப்பொருட்களை எல்லாம் கண்டுபிடிக்க முடியாமல் போய்விட்டதா? அல்லது அவர்களுக்கு அவை அவசியமற்ற ஒன்றாக இருந்ததா?

சாதனங்களை கொண்டு தனது காரியங்களை எளிதாகவும் இலகுவாகவும் கச்சிதமாகவும் நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்பது உண்மைதான். ஆனால் அதற்குமுன் வாழ்ந்த பெரு மக்கள் தம்மையே ஒரு கருவியாகத்தான் பாவித்தனர். தானே உலக அதிசயக் கருவிகளில் ஒன்றென்பதாக எண்ணி தனக்கு இன்னொரு கருவியை கண்டுபிடிக்க வேண்டிய அவசியமோ தேவையோ இல்லை என்பதாக நினைத்தனர்.

பக்கத்து ஊரில், அண்டை வீட்டில், அயல் நாட்டில் நிகழும் நடப்புக்களை தெரிந்து கொள்வதற்காக கண்டு பிடிக்கப்பட்ட பல கருவிகள் இருக்கின்றன. இக்கருவிகள் உருவாக்கப்படு முன் வாழ்ந்த மனிதர்களுக்கு உலக நடப்புக்களெல்லாம் தெரியாமலிருந்ததென்று எண்ணிக் கொள்ளாதே. நீ தெரிந்து கொண்டதெல்லாம் ஜடப்பொருட்கள் எனக் கூறப்படும் பிணங்களைப் போன்ற கருவிகள் வாயிலாகத்தான். அதற்குப் பெயர்தான் விஞ்ஞானமாகும். ஆனால் அவர்கள் தெரிந்து கொண்டிருந்ததெல்லாம் உயிருள்ள நித்தியவானாகிய ஒருவனைக் கொண்டாகும். இதற்குப் பெயர் மெய்ஞானமாகும். விஞ்ஞானம் மற்றும் மெய்ஞானம் என்னும் இரு சொற்களும் எழுத்திலும் மொழிவதிலும் ஒரு சிறு வித்தியாசத்தை மட்டும் தான் கொண்டுள்ளது. ஆம். விஞ்ஞானம் தோன்றியதே மெய் ஞானத்திலிருந்து தானென்று சொன்னால் அது உனக்கு ஆச்சரி யமாக இருக்கிறதல்லவா!

பார்! விஞ்ஞானம் என்பது நவீனமாகக் கண்டு பிடிக்கப் படும் சாதனங்கள் என்பதாக நீ எண்ணிக் கொண்டிருக்கிறாய். ஆனால் அந்த விஞ்ஞானம் புதிதாக எதையும் கண்டுபிடித்து விடவில்லை. கருவிகளின்றி காரியம் கச்சிதமாக நிறைவேறு

வதற்குரிய வல்லமையை அல்லாஹ் மு:ஃமினுக்குள் அமைத்தி ருக்கிறான். அதைப்பற்றி திருமறையில் தெளிவுபடுத்திய பின்னரும் கூட அதை உணர மறுக்கும் இஸ்லாமிய சமுதா யத்தின் பலவீனத்தை தெரிந்துகொண்ட காபிர்கள் அதை ஆராய்ச்சி செய்து சாதனங்களின் வாயிலாக உலகின் முன் வைத்துக் கொண்டுள்ளனர்.

மேலும் விஞ்ஞானத்தினால் எதையுமே ஒருபோதும் சாதிக்க முடியாது. மாறாக சாதனைகளை படைக்கக்கூடிய வல்லமை பெற்றது மெய்ஞானமாகும். மேகக் கூட்டங்களை காரணமாகக் கொண்டு மழை பொழியும் என்று சொல்வது விஞ்ஞானமாகும். இனி மழை தேவையெனில் மேகத்திடம், இன்ன இடத்தில் நீ பொழிவாயாக என்றும் மழை கடுமையானால் போதும் நிறுத்திக் கொள் என்று ஆணையிடும் ஆற்றலை கொண்டது மெய்ஞான மாகும். ஒரு பெண்ணின் கர்ப்பப்பையில் வளரும் குழந்தை இறை ஆற்றலைக் கொண்டு தோற்றம் கொடுக்கப்பட்ட பின்னரே அது ஆணா அல்லது பெண்ணா என்பதை விஞ்ஞானத்தின் சாதனம் சொல்லித் தருகிறது. ஆனால் மணமாகு முன்பே இத்தம்ப தியருக்கு பிறக்கப் போகும் முதல் குழந்தை ஆணா அல்லது பெண்ணா என்பதையும், மொத்தம் இத்தனை குழந்தைகள் இவர்களுக்குப் பிறக்கும் என்பதைச் சொல்வது மெய்ஞானமாகும். தொலைவிலுள்ள செய்திகளை தெரிந்து கொள்ள உதவுவது விஞ்ஞானத்தின் சாதனமாகும். இது எதுவுமே இல்லாமல் எல்லாவற்றையும் சொல்லிக் கொடுப்பது மெய்ஞானமாகும்.

இது மட்டுமல்ல. இல்லாததை தோன்றச் செய்வதும், தோன்றியதை மறைப்பதும், ஜீவியத்தை கொடுப்பதும், கொடுத்த ஜீவியத்தை திருப்பி எடுத்துக் கொள்வதும் மெய் ஞானமாகும். மிக விரைவாகப் பறந்தோடும் குதிரை மூன்று மாதம் செல்லும் பயணத்திற்குரிய தொலைவை கண்ணை மூடித் திறப்பதற்குள் மெய்ஞானத்தின் மூலம் சென்றுவர முடியும் என்பதை நிரூபித்துக் காட்டியவர் ஆஸிப் பின் பர்கியா எனும் மெய்ஞானி. இது விஞ்ஞானத்தின் மூலம் சாத்தியமா? விஞ்ஞானி களுக்கு இதனை ஒரு சவாலாக வைத்தால் அவர்களால் செய்து காட்ட முடியுமா?



மனிதன் கஷ்டத்திலும், கவலையிலும், பசியிலும், பட்டினி யிலும், தீராத நோயினாலும் அவஸ்தைபட்டு புலம்பிக் கொண்டி ருக்கிறான். அவனுடைய வணக்கங்களும் வேண்டுதல்களும் அவனுக்குக் கை கொடுப்பதாக இல்லை. உயிருக்கோ உத்திரவா தமில்லை. பணம் இருக்கிறது. பட்டம் இருக்கிறது. அதிகாரம் இருக்கிறது. இருந்தும் அலைமோதிக் கொண்டிருக்கிறான். இந் நிலையில் காலம் மாறி விட்டதென்றும் புலம்புகிறான்.

மேலும் காபிர்களை நீங்கள் உங்களின் காரியங்களுக்குரிய காரியஸ்தர்களாக ஆக்க வேண்டாமென இறைவன் கூறுகிறான். அல்லாஹ்வுக்கும் அவனுடைய ரஸூலுக்கும் அச்சப்பட வேண்டிய மனிதன் இன்று யார் யாரிடமெல்லாமோ தனது பாதுகாப்புக்குரிய உதவியை தேடி தனக்கு உதவுமாறு மன்றாடிக் கொண்டிருக்கிறான். இது விஞ்ஞானத்தை கைகொண்டு மெய் ஞானத்தை நழுவ விட்டதே இதற்குரிய முக்கியமான காரணமாகும்.

மூவாயிரம் ஆண்டுகளுக்குப்பின் இப்பூமியில் இன்னது நடக்கும் என்று விஞ்ஞானி சொல்வதை ஏற்கும் மனிதன் நாளை இன்னது நடக்கும் என்று ஒரு மெய்ஞானி சொல்வதை கேட்டு கேலியும் கிண்டலும் செய்கிறான். நாளை என்ன நடக்கும் என்பது மெய்ஞானிக்குத் தெரியுமென்று சொன்னால் போதும். உடனே ஷிர்க் ஷிர்க்கென்று ஓலமிடுகிறான். இந்நிலையில் இவர்கள் எவ்வாறு அல்லாஹ்வை ஈமான் கொண்டோரென தம்மை வாதிக்கின்றனர்?

அல்லாஹ்வின் பெரும் பெரும் வல்லமைக்குரிய ஆற்றல்களை எல்லாம் வழங்கப்பட்டுள்ள மெய்ஞானிகளை பொய்யாக்கும் சமுதாயத்திற்கு அல்லாஹ்வின் பேருதவி எப்படிக் கிடைக்கும்? எனவே மனிதா! உனது ஆரம்பத்தை கொஞ்சம் சிந்தித்துப் பார். உனது வரலாற்றை அறிந்து கொள்ள ஆசைப்படாமல் அடுத்த வரின் வரலாற்றில் என்னென்ன ஓட்டைகள் இருக்கிறதென்று தேடுவோரின் செயலை அறிவுடையோரின் செயலென்று சொன் னால் அறிவுள்ளோர் இதை ஏற்றுக் கொள்வார்களா? உனக்குள் முடங்கிக் கிடக்கும் ஆற்றலையும் சக்தியையும் வல்லமையையும் கண்டுபிடித்து அதை வெளிப்படுத்த முனையாமல் அடுத்தவரின் ஆற்றலை பேசுவதில் உனக்கு என்ன லாபமிருக்கிறது?

உனது வரலாற்றை நீ ஆய்வு செய்வதாயின் முதலில் உனது குழந்தை பருவத்தை உற்றுப்பார். அதைத் தெரிந்துகொள்ள உனது மடியில் தவழ்ந்து விளையாடும் உனது குழந்தையின் நிலைகளை கவனித்துப்பார். குழந்தை தூக்கத்தில் சிரிப்பதையும் முகம் சுழிப்பதையும் கண்டு குழந்தைகள் வானவர்களைக் கண்டு அவர்களோடு உரையாடும் தன்மையுடையவை என்று நீயாகத்தானே சொல்கிறாய். வானவர்களோடு உனது குழந்தைக்கு கிடைத்துள்ள தொடர்பு ஒரு காலத்தில் உனக்கும் இருக்கத் தானே செய்தது? அதை இப்போது உன்னால் கற்பனைசெய்தாவது பார்க்க முடிகிறதா? ஏன் இந்தநிலை?

ஒருவரது காரியத்தின் நிமித்தமாக அயலூருக்கு பயணமான ஒருவர் அக்காரியம் முடியுமுன் திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டால் அவரது முகத்தில் எப்படி விழிப்பது என்றொரு உணர்வு எழுகிறது. அப்படிப்பட்ட உனக்கு நீ எதற்காகப் படைக்கப் பட்டாய் என்பதற்குரிய நோக்கத்தை தெரிந்து கொள்ளாமல் உன்னை படைத்தவனைப் பற்றி சிந்திக்காமல் சிந்தித்துத் தெளிந் தோரின் சகவாசமும் இல்லாமல் இறந்து இறைவனை எப்படி சந்திப்பது என்னும் உணர்வு உனக்கு ஏன் இல்லாமல் போனது? சரி. உன்னால் தான் சிந்திக்க முடியவில்லை. அப்படிப்பட்ட சிந்தனைவாதிகளின் தோழமையையாவது குறைந்த பட்சம் நீ ஏற்படுத்திக் கொள்ளக்கூடாதா? இக்கருத்தை உன்னால் ஜீரணிக்க முடியாது. காரணம் உனது பொறாமை என்னும் நெருப்பு உன்னலல்லாதவர்கள் இருப்பதாகச் சொல்வதை உன்னால் ஏற்க முடியவில்லை.

நன்றாகப் பார். முழு மனித இனமும் ஒரே மாதிரியான படித்தரத்தில் இருப்பது என்பது அசாத்தியமான ஒன்றாகும். ஒருவர் மருத்துவர் எனில் இன்னொருவர் நோயாளியாக இருந்தே யாக வேண்டும். இருப்பார். கண்டுபிடிக்க ஒருவர் எனில் அதை பாராட்ட பலர் இருப்பர். ஒருவர் ஆசிரியராகவும் மற்றவர்கள் மாணவர்களாகவும் இருப்பது தான் இயற்கையின் நியதி. இந்நிலையில் அனைவரும் ஒரே படித்தரத்தில் எவ்வாறு இருக்க முடியும்?

என்றாலும் உன்னாலும் இந்த வைகறையின் ரகசியங்களை



அறிய முடியாதெனில் அதை அறிவித்துக் கொடுக்க வேறு யாராவது இருந்தாக வேண்டுமல்லவா! இக்கருத்தை சிலர் ஏற்றுக்கொள்ள பின்வாங்குவது ஏன்? முஸ்லிமான நீயே இக்கருத்தை பொய்யாக்கினால் பிறகு உனக்கும் காபிருக்கும் என்ன வித்தியாசம்?

ஒவ்வொரு மனிதரும் இருவேறு நிலைகளை கொண்டவ ராகும். இதனை தெரிந்துகொள்ள முயலாதவர் முயன்றோரின் முகவரியை தெரிந்து கொள்ளவாவது குறைந்த பட்சம் முயல வேண்டும். அவ்வாறின்றி முயல்வோரின் சகவாசத்தை விட்டும் தூரப்படுதல் என்பது மிகவும் துரதிருஷ்டமாகும். இவ்வாறே மனிதன் அல்லாஹ்வின் ஆணைக்கு அடிபணிந்து வணக்கங்கள் புரிவானாயின் அல்லாஹ்வை அறிந்துகொள்ள அவனே அவனுக்கு துணை புரிவதாக வாக்களித்திருப்பது நாம் அறிந்துள்ள ஒன்றாகும். இந்நிலையில் நாம் வணங்கத்தான் செய்கிறோம். அதுவும் இரவு பகலாக பர்ழான சுன்னத்தான வணக்கங்களையெல்லாம் புரியத்தான் செய்கிறோம். அப்படி யிருந்தும் அல்லாஹ் வாக்களித்துள்ளது நமக்குக் கிடைத்த தாகத் தெரியவில்லை. வணக்க வழிபாடுகளைக் கொண்டு ஈடேற்றமடைந்து விடலாமெனக் கருதுவோர் கூட அதை அடைந்து விட்டதாகத் தெயவில்லை.

வணக்கமில்லாதவனுக்கு ஷரீஅத்தில் முன்னுரிமை கிடை யாது. பின்னும் வணக்கத்தை கொண்டு எது கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் அதனை விட்டு விடுவதற்கும் அனுமதி யில்லை. அவ்வாறாயின் நமக்கு நிகழ்ந்தது என்ன? வணக்கத்தில் கோளாறா? அல்லது வணங்குபவரிடம் கோளாறா? இரண்டிலுமே குழப்பம் இருப்பதுதான் இதற்குரிய காரணமாகும். உடல், உடை, இடம் ஆகிய மூன்றும் தூய்மையாக இருக்க வேண்டும் என்பது வணக்கத்திற்கு ஷரீஅத் கூறும் நிபந்தனையாகும். இவைகளில் ஒன்று இழக்கப்பட்டாலும் வணக்கம் செயலற் றதாக ஆகிவிடும். இனி இந்த நிபந்தனைகள் முழுமை பெற்றி ருந்தும் உள்ளம் தூய்மையாக இல்லாது போனாலும் மேற்கண்ட முடிவுதான். தரீகத்தின் நிபந்தனை முறிக்கப்படுவது தான் இதற்குரிய காரணமாகும்.

ஷரீஅத்தின் நிபந்தனைகளை சரிவர நிறைவேற்றும் எவரும் தரீகத்தின் நிபந்தனைகளை சரியாக நிறைவேற்ற முயற்சிப்பதாகத் தெரியவில்லை. இந்நிலையில் வணங்கி என்ன பிரயோஜனம் என எண்ணி வாளாவிருக்கின்றனர். இது தன்னைத்தானே ஆபத்தில் சிக்கவைத்துக் கொள்வதாகும். தேகத்தில் அசுத்தமிருந்தால் அதை சுத்தம் செய்வதற்குரிய முறைகளை நாம் அனைவரும் தெரிந்து வைத்திருக்கிறோம். ஆனால் இதற்கு முற்றிலும் மாறு பட்டது தான் தரீகத்தின் நிபந்தனைகளாகும். இன்னொருவரின் உதவியின்றி இது ஒருபோதும் கைகூடாது.

அருமை தோழர்களான ஸஹாபாக்கள் தமது முகக் கண்களால் அண்ணலெம் பெருமான் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களோடு நெருங்கிய தொடர்பு வைத்திருந்த ஒரேயொரு காரணத்திற்காக, அதன்பின் அவர்களைக் கண்ட தாபியீன்களும் தபவுத் தாபியீன்களும் அவர்களைக் கொண்டு அவர்களின் அந்தரங்க அசுத்தங்கள் வெளிப்படையான எவ்வித முயற்சியுமின்றி பரிசுத்தப்படுத்தப்பட்டன. அதனால் அவர்கள் சகலவற்றின் மீதும் ஆளுகை நடத்தினர். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அவர்களுக்குச் சொல்லும் கருத்துக்களை மிக எளிதாக அவர்களுடைய தோழர் பெருமக்கள் விளங்கிச் செயல்பட்டது போல அவர்களும் வாழ்ந்தனர். அதேநேரம் இன்னொரு சாரார் இதை பகிஷ்க ரித்தும் வந்தனர்.

உதாரணமாக நாயகம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அபூகுபைஸ் என்னும் மலையடிவாரத்தில் நின்று அக்காலத்திய மக்களையெல்லாம் அழைத்து 'லாஇலாஹ இல்லல்லாஹ்' என்னும் மூலக்கருத்தை சொன்னபோது அவர்கள் பேசிய பாஷையும் அரபியாக இருந்ததால் அதை அவர்கள் இலகுவாகப் புரிந்து கொண்டனர் என்பதைவிட நபியவர்களைக் கொண்டு சொல்லப்பட்டதால் அவர்கள் புரிந்து கொள்வதற் குரிய வாய்ப்பினை பெற்றார்களென்று தான் சொல்ல வேண்டும். அதேநேரம் வேறுசிலர் மறுத்தனர். நபியவர்களின் அக்கருத்தை ஏற்றவர்கள் அல்லாஹ்வின் ஆணை கிடைக்கும் வரை ஒளிந்தும் மறைந்தும் வாழ்ந்தார்கள் என்று சொல்வதைவிட நாயகம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களது



தோழமையின் கீழ் அமர்த்தப்பட்டு சுத்திகரிக்கப்பட்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

இதில் தபவுத் தாபியீன்கள் வரையுள்ள காலத்திய மக்கள் தூய்மையான உள்ளமுடையோராக இருந்தனர். ஆனால் அதற்குப் பின்வந்த காலத்தில் பொய்யர்களும் பித்தலாட்டக்காரர்களும் தோன்றிய காரணத்தால் உண்மையாளர்கள் மக்களின் சகவா சத்தை விட்டும் ஒதுங்கி விட்டனர். தம்மை தூய்மைபடுத்திக் கொள்ள ஆசைப்பட்டோர் அவர்களை தேடிச்சென்று தூய்மை படுத்திக்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதைத் தான் தஸவ்வுப் என்று கூறுகின்றனர். ஆனால் இன்று தஸவ்வுப் என்றாலே அது ஒரு கசப்பான விஷயமாகி விட்டது. இது இஸ்லாத்தின் அடிப்படைக்கே விரோதமானது என்பதாக எண்ணி மூலையில் தூக்கிப் போட்டு விட்டனர்.

பாருங்கள்! இஸ்லாம், ஈமான், இஹ்ஸான் ஆகிய மூன்றும் ஒருங்கிணைந்ததே தீன் - என்னும் மார்க்கமாகும். இங்கே இஹ்ஸான் என்பதற்குத் தான் தஸவ்வுபென்று சொல்லப்படு கிறது. பின் எப்படி இது இஸ்லாத்தின் அடிப்படைக்கு மாற்றமாகும்? அதேநேரம் இதற்கு சில நபர்கள் தான் காரண மென்றால் அது மிகையாகாது. மேலும் இஸ்லாமிய மார்க்கத்தில் பொய்யான நபிமார்கள் போன்றோரெல்லாம் தோற்றமெடுக்க முடியுமாயின் சூபிய்யாக்கள் என்னும் பெயரில் பொய்யர்கள் தோன்றுவது அதிசயமா என்ன? இன்னும் தஸவ்வுப் என்பதற்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கருத்துக்கள் இருப்பதாக அல்லாமா ஸுஹ்ரவர்தி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறுகின்றனர். அவை களிலிருந்து சிலவற்றை உங்களின் பார்வைக்கு தருகிறோம்.

## தஸவ்வுப்

التصوف تصفية القلب عن موافقة البرية ومفارقة الطبيعية واخماد الصفات البشرية ومجانبة الدواعى النفسانية ومنازلة الصفات الروحانية والتعلق بالعلوم الحقيقية واستعمال ما هو اولى على الابدية والنصح لجميع الامة والوفاء لله على الحقيقة واتباع الرسول فى الشريعة.

"மனிதனில் இயல்பாகக் காணப்படும் பண்புகளனைத்தையும் விட்டு உள்ளத்தை தூய்மைபடுத்தி ஹகீகத்தான விஷயங்களோடு தொடர்பை ஏற்படுத்தி சமுதாயத்திற்கு உபதேசம் செய்வதும் அல்லாஹ்வின் கட்டளைகளை பூரணமாக்குவதும் மார்க்க அனுஷ்டானங்களில் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை பின்பற்றுவதுமே தஸவ்வுபாகும்"

التصوف كله آداب لكل وقت آداب فمن لزم آداب الاوقات بلغ مبلغ الرجال ومن ضيع الآداب فهو بعيد من حيث يظن القرب ومردود من حيث يرجو القبول.

"தஸவ்வுப் என்பது முழுக்க முழுக்க அதபு என்னும் மரியாதையைக் கொண்டதாகும். ஒவ்வொரு வினாடியும் அதபோடு இருக்க வேண்டும். சதா அதபோடு இருப்பவர் பெரிய மனிதர்களின் அந்தஸ்த்தை பெற்றுக் கொள்வார். அதபில்லாதவர் தன்னை ஒரு பெரும் தகுதியுடைய இறை நெருக்கமுள்ளவராகக் கருதிக் கொண்ட போதிலும் அவர் அல்லாஹ்வை விட்டும் தூரமானவரே. அத்துடன் தன்னை அல்லாஹ்விடம் ஒப்புக் கொள்ளப்பட்டவராக அவர் எண்ணிக் கொண்டிருந்தாலும் அவர் அல்லாஹ்வால் தூரத்தப்பட்டவரே"

تزكية النفس من الاوضار العالقة بها كالحسد والتكبر وحب الدنيا وحب الجاه وكذلك ابتغاء توجيهها الى حب الله عز وجل والرضا عنه والتوكل عليه والاخلاص له.

"பதவிமோகம், உலகாசை, பெருமை, பொறாமை, போன்ற கீழ்த்தரமான குணங்களை விட்டும் ஆத்மாவை சுத்தப்படுத்துவதோடு அல்லாஹ்வுடைய திருப் பொருத்தம் ஒன்றுக்காக மட்டுமே செயலாற்றி தவக்கல் மற்றும் இக்லாஸுடையவராக இருப்பது தான் தஸவ்வுபாகும்"

التصوف علم يعرف به احوال تزكية النفس وتصفية الاخلاق وتعمير الظاهر والباطن لنيل السعادة الابدية.

"ஆத்மாவை பரிசுத்தப்படுத்தி நற்குணங்களை தேடி நிரந்தரமான சிறப்பை பெற்றிட அந்தரங்க வெளிரங்க அசுத்தங்களை அகற்றுவதற்குரிய விஷயங்களை சேகரித்துக் கொள்ளும் ஒரு



அறிவுக்கு தஸவ்வுப் என்று சொல்லப்படும்"

اصل التصوف ملازمة الكتاب والسنة وترك الاهواء والبدع ورؤية اعذار الخلائق والمداومة على الاوراد وترك الرخص والتأويلات.

"குர்ஆன் ஹதீதை இறுகப்பற்றி பித்அத்துக்களையும் மனோ இச்சைகளையும் களைவதோடு சிருஷ்டிகளின் குறைகளை நோட்டமிட்டுக் கொண்டிருக்காது தொடர்ந்து விர்துகளை ஓதி வருவதும், த:'விலாத் (வலிந்துரை) செய்வதையும், விடப்பட வேண்டிய விஷயங்களை விட்டு விடுவதும்தான் எதார்த்தமான தஸவ்வுபாகும்"

மேற்கூறப்பட்ட அறிஞர்களின் ஏகோபித்த கருத்துப்படி தஸவ்வுப் என்றால் நன்னடத்தை தான் என வலியுறுத்தப் படுவதை நாம் தெரிந்து கொள்கிறோம். இதற்காக இப்பாதையில் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட நல்லோர்கள் கண்டிப்பாக அக்குணங்களை ஆபரணமாக அணிந்த ஒருவராகத்தான் இருப்பார்கள். இவர்களே சூபிகள் எனப்படுவர். அடுத்து சூபி என்பார் யார் என்பதை அறிஞர்கள் நமக்குப் பின்வருமாறு சொல்லிக் கொடுப்பதை பாருங்கள்,...

## யார் ஸூபி?

الصوفي من صفى سره من كدورات الاكوان وما رأى لنفسه على غيره مزية.

"அனைத்து வகையான அசுத்தங்களை விட்டும் தூய்மையான வரும் பிறரிடம் இல்லாத ஒன்று தம்மிடம் இருப்பதாக எண்ணும் விஷயங்களிலிருந்தும் தம்மை தூய்மைபடுத்திக் கொண்டவரே சூபியாகும்"

الصوفي التقي الذي لا يريد فسادا فى الارض ولا علوا.

"பூமியில் குழப்பத்தையும் உயர்வையும் விரும்பாத தக்வாவுடைய ஒருவரே சூபியாகும்"

الصوفي من صفى قلبه لله.

"அல்லாஹ்வுக்காக தனது உள்ளத்தை தூய்மைபடுத்தியவரே சூபியாகும்"

من صفى من الكدر وامتلأ من الفكر وانقطع الى الله من البشر واستوى عنده الذهب والمدر.

"அசுத்தங்களிலிருந்து தூய்மையாகி தொலேநோக்குச் சிந்தனையில் நிறைந்து காணப்படுபவரும் தங்கமும் வெள்ளியும் ஒன்றே எனக் கருதுமளவிற்கு மனிதத் தொடர்பற்று அல்லாஹ் வோடு தொடர்பை ஏற்படுத்திக் கொண்டிருப்பவரே சூபியாகும்"

الصوفي لا يكدره شيئ ويصفو به كل شيئ.

"அவரை எந்தப் பொருளும் அசுத்தப்படுத்தாது. அத்துடன் அவரைச் சார்ந்துள்ளவை அனைத்தும் பரிசுத்தமடையும் ஒருவரே சூபியாகும்"

الصوفي هوالذي يتقرب الى الله بفروض الله ثم يزيدها بسنة الرسول عليه الصلاة والسلام.

"அல்லாஹ் விதித்த கட்டாயக் கடமைகளை நிறைவேற்று வதன் மூலமாக அவனது சமீபத்துவத்தை ஏற்படுத்திக் கொண்டு நாயகம் முஹம்மத் ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லமவர்களது வழிமுறைகளை பின்பற்றி அவர்களின் நெருக்கத்தை அதிகப் படுத்திக் கொள்ளும் ஒருவரே சூபியாகும்"

الصوفي كالارض يطرح عليها كل قبيح ولا يخرج منها الا كل مليح.

"எல்லா வகையான அசுத்தங்களும் பூமியில் வீசப்பட்டால் அதை சுத்திகரித்து நல்லது அதிலிருந்து வெளியாகுவது போன்றவரே சூபியாகும்"

ما من شيئ فى الميزان اثقل من حسن الخلق.

"மீஸானில் வைக்கப்படும் பொருட்களில் நற்குணத்தை விட மகத்தான பொருள் வேறு எதுவுமே இல்லை"

இதில் நற்குணம் என்பது ஒருவரை கண்டால் நாலாக மடிந்து சிரிக்கச் சிரிக்கப் பேசுவதும், வித்தியாசமின்றி அனைவரிடமும் கலந்துரையாடுவதுமே நற்குணம் என்பதாக நம்மில் பெரும்பாலோரிடம் காணப்படும் கருத்துக் கணிப் பாகும். இது பகட்டுத்தனமே அன்றி நற்குணமல்ல. இத்தகை



யோர் ஏமாற்றுக்காரர்கள். குள்ளநரியின் குணங் கொண்ட வர்கள். உள்ளத்தில் ஒன்றை வைத்துக்கொண்டு உதட்டளவில் சிரித்துப் பேசுவதைவிட மனதுக்குப் பிடித்தமானவர்களுடன் அல்லாஹ் ரஸுலுக்காக பேசாமலிருப்பதை நற்குணம் என்று சொன்னால் அதில் எந்தத் தவறுமில்லை.

இதுபோன்றே மாந்திரீகத்தின் மூலமும் ஒருவர் சூபியாகி விட முடியாது. இவ்வாறே சூபிய்யாக்களுடைய நூல்களைப் படித்துவிட்டு அதைப்பற்றி விளக்கம் சொல்பவரும் சூபியாகி விட முடியாது. ஆம். சூபி என்பவர் மெஸ்மரிஸம் செய்யும் கோமாளியல்ல. தல்ஸமாத்தின் மூலமாக ஜனங்களிடையே பிரபலமாவோரும் சூபியல்ல. மாறாக சூபிசம் என்பது இதயத்தை பரிசுத்தப்படுத்தும் பாதையாகும். இதில் இதயம் தூய்மை யடைய வேண்டுமாயின் முதலில் அதிலுள்ள நோய்களைக் கண்டறிய வேண்டும். சரீரம் ஆரோக்கியமாக இருக்க வேண்டு மாயின் அதற்குரிய நோய்களை முதலில் கண்டறிந்து தகுந்த பரிகாரம் செய்வதோடு அதற்குத் துணைபுரியும் நல்ல சத்தான உணவுகளையும் உட்கொள்ள வேண்டும். தேக சுகத்திற்காக எதையெதையோ அர்ப்பணிக்கத் தயாராக இருக்கும் நம்மவர் களில் உள்ளத்தைப் பற்றி சிந்திப்போர் எத்தனை பேர்?

"உள்ளம் சம்பந்தமான அறிவும் அதிலுள்ள நோய்களான பொறாமை, முகஸ்துதி போன்றவைகளை இனங் காண்பதும் ஒவ்வொருவர் மீதும் கட்டாயமான கடமையாகும் என்பதாக இமாம் கஸ்ஸாலி ரஹிமஹுுல்லாஹ் அவர்கள் கூறுவதாக இமாம் சுயூத்தி ரஹிமஹுுல்லாஹ் கூறுகின்றனர்"

இதே கருத்தை அல்லாமா இப்னு ஆபிதீன் ரஹிமஹுல் லாஹ் அவர்களும் தமது நூலான துர்ருல் முக்தாரில் பதிவு செய்துள்ளனர். உள்ளத்தின் நோய்களை இனங்கண்டு அதற்குப் பரிகாரம் செய்ய நாம் முன்வர வேண்டும். அதைவிட்டு நோயுள்ளவர்களாகவே இருந்து கொண்டு வணக்கத்தை நிகழ்த்துவோமாயின் அவ்வணக்கம் அல்லாஹ்வால் புறக்க ணிக்கப்பட்டதாகத் தான் இறுதிவரை இருக்கும்.

"தனது ரட்சகனின் சந்திப்பை எதிர்பார்ப்பவர் நற்காரி யங்களை செய்து கொள்ளட்டும்" அல்-குர்ஆன்.

"அணுவளவேனும் பெருமையுள்ள உள்ளம் யாரிடமிருக்குமோ அவர் சுவர்க்கம் நுழைய மாட்டார்" என்பதாக ஏந்தல் நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களும் அறிவுறுத்திக் கொண்டுள்ளனர். இந்நிலையில் இதற்கான வழி என்ன?

"சூபிய்யாக்களோடு இணைந்திருப்பது கட்டாயமாகும்" என்பதாக இமாம் கஸ்ஸாலி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் இதற்கான வழியை நமக்கு சொல்லித் தருகின்றனர்.

தஸவ்வுப் என்றால் நற்குணம் என்பதையும் சூபி என்றால் தூய்மையான தெளிந்த உள்ளமுடையவர் என்பதையும் இப்போது நாம் தெரிந்து கொண்டோம். இந்நிலையில் நற்குணமும் தெளிந்த உள்ளத்தை உடையோரும், இன, மொழி, மத வேறுபாடு இல்லாதோரும் எல்லா மட்டத்திலும் காணப்படலாம் அல்லவா? இதற்காகத்தான்,...

الطرق كلها مسدودة على الخلق الا على من اقتفى اثر رسول الله صلى الله عليه وآله وسلم لان علمنا هذا مقيد بالكتاب والسنة.

"சிருஷ்டிப் பொருட்களுக்கு ஒரேயொரு பாதையைத் தவிர அனைத்துப் பாதைகளும் மூடப்பட்டு விட்டன. இதில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை பின்பற்றுவது தான் அப்பாதையாகும். நிச்சயமாக எம்முடைய ஞானமெல்லாம் குர்ஆன் ஹதீதோடு மட்டுப்படுத்தப்பட்டதாகும்" என்பதாக இமாம் ஜுனைதுல் பக்தாதி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறுகின்றனர்.

من لم يزن احواله وافعاله في كل وقت بالكتاب والسنة ولم يتهم خواطره فلا تعده في ديوان الرجال.

"தனது உள்ளத்தின் கோரிக்கைகளுக்கு முன்னுரிமை கொடுக்காதவரையும் தனது செயல்களையும் நிலைமைகளையும் குர்ஆன் சுன்னத்தை கொண்டு அளந்து பார்க்காதவரையும் நல்லோரின் பட்டியலில் சேர்க்கப்பட மாட்டாது" என்பதாக அபூ ஹப்ஸ் அல் ஹத்தாத் ரஹிமஹுல்லாஹ் கூறுகின்றனர்.

"குர்ஆன் ஹதீதை விட்டு விட்டு இப்னு சீனா போன்றோரின்



சிந்தனை வலையில் சிக்குண்டவனை சாட்டையால் அடித்து வீதியில் ஊர்வலமாகக் கொண்டு வருவதோடு குர்ஆன் ஹதீதை பின்பற்றாமல் வழிகேடர்களின் வீணான விஷயங்களில் ஈடுபட்டதற்குரிய கூலி இதுதானென்று அவனுக்குச் சொல்ல வேண்டும்" என்கின்றனர் இமாம் சுப்கி ரஹிமஹுல்லாஹ் அவர்கள்.

"இப்னு சீனா என்பவர் மனித ஷைத்தான்களில் ஒருவராகும் என இப்னு ஸலாஹ் என்பாரால் தூற்றப்படும் ஒருவருடைய கருத்துக்களை பின்பற்றுபவனை நான் கடுமையாக ஆட்சேபிக்கிறேன்" என்பது இமாம் கஸ்ஸாலி ரஹிமஹுல்லாஹ்வின் வார்த்தையாகும். இனி நாம் தோழமை கொள்ள வேண்டிய சூபி என்பவர் எப்படிப்பட்டவராக இருக்க வேண்டும் என்பதை குறித்து இப்போது பார்ப்போம்.

## ஸூபிய்யாக்களின் விலாசம்

"சூபிகள் எனப் பிரச்சாரம் செய்துகொண்டு ஸாவிய்யாக்களிலும் தகிய்யாவிலும் கான்காஹ்விலும் இருப்பவர்கள் ஷரீஅத்தின்படி செயலாற்றுகின்றனரா என்பதை அவசியம் பரிசோதிக்கத் தவறாதீர்கள்" இது ஷெய்கு அலாவுத்தீன் அந்நக்ஷபந்தி ரஹிமஹுல்லாஹ் அவர்களின் வாக்கியமாகும்.

"ஷரீஅத்திற்கு மாற்றமான செயல்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் ஒருவர் ஆகாயத்தில் பறப்பவராகவோ நீரின்மேல் நடப்பவராகவோ இருப்பதை நீங்கள் பார்ப்பீர்களாயின் நிச்சயமாக அவர் பொய்யான தஜ்ஜாலாகும், தவறான வழியில் இருப்பவராகும் என்பதை தெரிந்து கொள்ளுங்கள்" என்பது ஸையிதுனா கௌஸுல் அஃழம் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் நல்லுபதேசமாகும். அப்படியானால் அவர் குர்ஆன் ஹதீதை அறிந்தவராகவும், கமாலிய்யத்தான பண்புகளை கொண்டவராகவும் இருக்க வேண்டும். இவ்வாறே பதவிமோகம் போன்ற உலகாசைகளை துறந்தவராகவும் நாயகம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை சென்று சேரும் ஷெய்குல் காமிலிடம் பைஅத் பெற்றவராகவும் ஜனங்களில் கிலாபத் கொடுக்கப்பட்டவராகவும் இருக்க வேண்டும்.

மார்க்க விளக்கம் தெரியாதவர், முஸ்லிம்களின் கௌரவத்தை

மதிக்காதவர், தேவையில்லாத விஷயங்களில் ஈடுபடுபவர், மனோ இச்சைகளுக்கு அடிமையானவர், தீய குணங்கள் நிறைந்தவர் முர்ஷித் காமிலாக இருக்க முடியாதென இமாம் அபுல் அப்பாஸ் அல் முர்ஸி அவர்களும்,...

மனிதர்கள் மத்தியில் தெளிவான உள்ளமும், கேட்டால் கொடுக்கும் வள்ளல் தன்மையும், தனக்கு தீங்கிழைப்போரை கூட அரவணைப்பவரும், முரீதுகளின் தவறுகளை மறைப்பவரும் பேராசை இல்லாதவராகவும் ஷெய்கு என்பவர் இருக்க வேண்டும் என்பது ஷெய்கு அப்துல் அஸீஸ் தப்பாஹ் ரஹிமஹுல்லாஹ் அவர்களின் கூற்றுகும்.

காமிலான ஷெய்கு என்பவர் பனிரெண்டு வகையான குணங்களை தமக்குள் கொண்டிருக்க வேண்டும் என அஸ் ஸெய்யித் முஹம்மத் அபுல் ஹுதா என்பார் தமது **'அல் இக்துந் நழீது ஃபீ ஆதாபிஷ் ஷெய்கி வல் முரீதி'** என்னும் நூலில் குறிப்பிடுகின்றனர். அதாவது, ஹில்முன் - அதிகமான சகிப்புத் தன்மை, சித்ருன் - குற்றங்களை மன்னித்தல் என்னும் இறைப் பண்பு. அர்ர.'.பது - பிறரோடு இரக்கமாக இருத்தல். அர்ரஹ்மத் - பிறருக்கு அருளாக இருத்தல் என்பது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் பண்புகளையும், அஸ்ஸித்கு வத்தஸ்தீகு - உண்மையாளராக நம்பிக்கைக்குரியவராக இருத்தல் எனும் சித்தீகுல் அக்பர் ரழியல்லாஹு அன்ஹுவின் பண்புகளையும் நன்மையை ஏவுதல் தீமையை தடுத்தல் ஆகிய ஹழ்ரத் ஸெய்யிதுனா உமர் ரழியல்லாஹு அன்ஹுவின் பண்புகளையும் ஹழ்ரத் ஸெய்யிதுனா உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் பண்புகளான வெட்கம், அனைவருக்கும் ஸலாமுரைத்தல் போன்ற பண்புகளையும் ஹழ்ரத் ஸெய்யிதுனா அலி ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் பண்பாகிய முழுமையான துறவித்தனம், வீரம் ஆகிய பண்புகளையும் தமக்குள் கொண்டவராக இருக்க வேண்டுமெனக் கூறுகின்றனர்.

ஆதலால் ஷெய்காக இருப்பவர் குறுகிய மனப்பான்மை கொண்டவரல்ல. கேட்பவர் நல்லவரா கெட்டவரா எனப் பாகுபாடு பார்த்து கொடுக்கும் கஞ்சருமல்ல. இதனால்தான் ஜனங்களால் தூற்றப்படுவோரையும் இவர்கள் அரவணைப்ப



வர்களாக இருப்பதை நம்மால் காண முடிகிறது. "எல்லா வகையான தீய குணங்களையும் பாவங்களையும் செய்துவந்த ஒருவர் இறந்தபோது அவரது பிணத்தை மக்கள் சாக்கடையில் வீசியெறிந்து விட்டனர். அம்மனிதனை கலீமுல்லாஹ்வாகிய நபி ஸெய்யிதுனா மூஸா அலைஹிஸ்ஸலாமவர்களால் அவருக்குரிய இறுதிக் கடமைகள் செவ்வனே செய்யப்பட்டு நபியவர்களையே நல்லடக்கம் செய்யுமாறு அல்லாஹ் ஆணையிட்டதாக படித்தது உங்களுக்கு நினைவிருந்தால் இப்படிப்பட்ட குறுகிய எண்ணங்கள் உங்களுடைய உள்ளத்தில் ஊசலாடக் கூடாது." ஒவ்வொருவரும் இன்னொருவரது குறைகளை மறையுங்கள். அவரது குற்றங்களை மன்னித்து அவரிடமுள்ள நல்ல செயலுக்காக, நல்ல எண்ணத்திற்காக அவர்மீது நல்லெண்ணம் கொள்பவர்களாக இருக்க வேண்டும். இதனால்தான் இப்படிப்பட்ட நல்லோரிடம் செல்பவர் அவரிடம் வருகைதரும் அனைவரையும் ஆதரித்து அரவணைத்துக் கொள்கின்றனர். அவர்களையும் முரீதாக்கிக் கொள்கின்றனர். இதில் முரீதாவதற்கு வருபவர் உள்நோக்கம் கொண்டவராக இருப்பின் அவர் முரீதாவதற்கே தகுதியற்றவர் என்பது அவருக்கே தெரிந்து விடும். யார் யார் என்னென்ன நோக்கத்தில் அவர்களிடம் சென்று அவர்களின் கரத்தை பற்றினாலும் அதனுடைய பரக்கத்தால் அவர் திருந்தலாம் என்னும் நல்லெண்ணத்திலேயே பைஅத்துக் கொடுக்கின்றனர். ஆதலால் முதலில் நீ பிடித்த கரத்தை பாதுகாத்துக் கொள்ள முயற்சி செய்.

**"யாரை பார்ப்பதால் அல்லாஹ்வின் நினைவும், எவருடைய பேச்சு உங்களை வணக்கத்தின் பால் ஆசையையும், எவருடைய செயல் மறுமைக்கான கட்டுச் சாதமாக இருப்பதையும் உணருகிறீர்களோ அவரே தோழமை கொள்ளத் தகுதியுடையவர்"** என நாயகம் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஹழ்ரத் ஸெய்யிதுனா இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹுவின் கேள்விக்கு விடையாகச் சொன்ன நபிமொழி முஸ்னத் அபீ ய.'.லா என்னும் நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

எவரோடு பைஅத்துச் செய்து கொள்ள நீங்கள் விரும்புகிறீர்களோ அவரிடம் மேற் கூறப்பட்ட பண்புகளை காணுவீர்களாயின் கண்டிப்பாக அவர் ஒரு காமிலான வழிகாட்டி என்பதில்

சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. அவரது தோழமையை பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். அவரிடம் பைஅத்துச் செய்து கொள்ளுங்கள்.

அவருடைய கரத்தை பற்றியவர் நாயகம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் கரத்தை பற்றியவராகும். கரத்தை பற்றியபின் ஷெய்கின் சபையில் அமரும் போதெல்லாம் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் திருச்சபையில் அவர்களின் அருமை தோழர்கள் பின்பற்றிய பண்புகளை உங்களுக்குள்ளும் ஏற்படுத்திக் கொள்ளுங்கள். அவைகள் உங்களுக்குள் அமைந்து விட்டதா என்பதை கவனிக்கத் தவறாதீர்கள்.

அருமை தோழர்கள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை ஏறிட்டுப் பார்ப்பதில்லை. நபியவர்களின் திருமுடி போன்ற பொருட்களின் விஷயத்தில் நபித்தோழர்கள் கொண்டிருந்த ஆர்வத்தை போன்றதொரு ஆர்வம் உங்களுடைய உள்ளங்களிலும் ஊசலாடுகிறதா என்பதை கவனியுங்கள். இத்தகைய உணர்வுகளை நீங்கள் உங்களுக்குள் காணுவீர்களாயின் நிச்சயம் நீங்கள் பற்றிய கரம் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் கரம்தான் என்னும் உணர்வை உங்களுக்குள் ஏற்படுத்திக் கொள்ளுங்கள். அல்லாஹ்வின் மீதும் அவனது தூதர் மீதும் சத்தியமிட்டுச் சொல்லப்பட்ட பண்புகளை மட்டுமல்ல அத்தகைய எண்ணங்கள், ஊசலாட்டங்களைக் கூட நமது நாதாக்களின் சபைகளில் அமரும்போது நம்மால் காண முடிகிறது என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்வதில் உவகை கொள்கிறோம்.

ஷெய்குமார்களின் தோழமையை கொண்டிருந்தாலே போதுமே! அவர்களிடம் பைஅத்துச் செய்துதான் ஆக வேண்டுமா என்ன? என நீங்கள் நினைப்பதுபோல தோழமை மட்டும் போதும் என்றிருந்தால் ஹுஜ்ஜத்துல் இஸ்லாம் எனப் போற்றப்படும் இமாம் கஸ்ஸாலி ரஹிமஹுல்லாஹ் போன்றோர் அஷ்ஷெய்கு யூசுப் அந்நஸ்ஸாஜ் ரஹிமஹுல்லாஹ் அவர்களின் கரத்தை பிடித்திருக்கத் தேவையில்லை. இவ்வாறே சுல்தானுல் உலமா எனப் போற்றப்படும் இமாம் இஸ்ஸுத்தீன்



பின் அப்திஸ்ஸலாம் ரஹிமஹுல்லாஹ் போன்றோர் அஷ்ஷெய்கு அபுல்ஹஸன் அஷ்ஷாதுலி ரஹிமஹுல்லாஹ் போன்றோரின் கரத்தை பற்றியிருக்கத் தேவையில்லை. இமாம் பக்ருத்தீன் ராஸி ரஹிமஹுல்லாஹ் போன்றோர் அஷ்ஷெய்கு நஜ்முத்தீன் குப்ரா ரஹிமஹுல்லாஹ் போன்றோரின் கையைப் பிடித்திருக்க வேண்டிய அவசியமேயில்லை. அன்றைய அறிஞர் பெருமக்களுக்கெல்லாம் தோன்றாத விளக்கமும், விவேகமும் இன்று உன் போன்றோரிடம் தோன்றியுள்ளதெனில் அதற்கு உனது உள்ளத்தில் தோன்றியுள்ள நோயே காரணமாகும். அடுத்து,...

பதவி மோகம் மற்றும் பணத்தாசை போன்றவை உண்மையிலேயே இல்லாதவராக இருக்க வேண்டும். இத்தகைய நிபந்தனைகளை உள்ளடக்கிய ஒருவர் காமிலான இன்னொருவரிடம் பயிற்சி பெற்றவராக இருக்க வேண்டும். அவரது சில்சிலா - ஷெய்குமார்களின் வரிசைத்தொடர் நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் வரை முறையாக எவ்விதத் துண்டிப்புமின்றி சென்றடையக் கூடியதாக இருக்க வேண்டும். குறைவான உணவு, குறைவான பேச்சு, குறைவான தூக்கம், அதிகமான தொழுகை, அதிகமான தர்மம், அதிகமான நோன்பு போன்றவற்றை மேற் கொண்டவராகவும் இருக்க வேண்டும். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் நூரானிய்ய(பிரகாச)த்தை பெற்றவராகவும் இருக்க வேண்டும். அழகிய நன்னடத்தை நற்பண்புகள் நிறைந்தவராக இருக்க வேண்டும். பெருமை, கஞ்சத்தனம், பொறாமை, பேராசை, சூது, வஞ்சகம், உலகப்பற்று போன்ற தீய குணங்களை விட்டும் தூய்மையடைந்து பிரபலமாகி இருக்க வேண்டும்.

இவைகளெல்லாம் ஒரு காமிலான ஷெய்கிடம் இருக்க வேண்டிய உயர் பண்புகள் என்பதாக இமாம் கஸ்ஸாலி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் குறிப்பிடுகின்றனர். ஷரீஅத்திற்கு மாற்றமாக செயல்படுவோன் சூபியாக இருக்க முடியாதென இமாமவர்கள் கூறுகின்றனர். நீ ஒரு பிரசங்கியாக இருந்தால் நீ செய்யாத ஒன்றை மற்றவர் செய்ய வேண்டுமென்று பிரசங்கம் செய்யாதே. இன்னும் உனது உபதேசத்தில் ஞானிகளின் ஷத்ஹாத், (வெளித் தோற்றத்தில் குப்ரை போன்று தோன்றும் வாக்கியங்கள்) இஷாராத், (சைக்கினைகள்) அஷ்ஆர்(கவிதை)

பவர். இன்னெருவர் தமது சொல்லாலும் செயலாலும் மார்க்கத்தை பாதுகாக்க தமது உயிரை தியாகம் செய்பவர். இதேபோல அகீதா மற்றும் அமல் போன்ற இரண்டிலும் செம்மையாக இருப்பவரை ஸாலிஹீன் என்று சொல்லலாம். எனவே இதில் யார் முதல் தரப்பைச் சார்ந்தவர்? யார் இரண்டாம் தரப்பைச் சார்ந்தவர் என்பது தெரிய வேண்டுமாயின் அதற்கு முர்ஷித் காமிலின் துணை மிக மிக அவசியமாகும். அவருக்கு மட்டும்தான் இவ்விஷயம் வெளிச்சமாக்கப்பட்டுள்ளது.

இமாம் கஸ்ஸாலி என்ருல் ஆரம்பப் பள்ளியில் படிக்கும் மாணவனுக்குக் கூடத் தெரியும். இமாமவர்களுக்கு வழங்கப் பட்ட அறிவு ஞானங்களைப் போன்று இறைவா! எனக்கும் அருள் புரிவாயாக என நல்லோர் அனைவரும் வயது வித்தியாசம் பாராமல் பிரார்த்திக்கின்றனர். அப்படிப்பட்ட அறிஞரான அவர்களே ஒரு காமிலான முர்ஷிதின் தொடர்பின்றி உண்மையை தெளிந்தறிய முடியாது என்கின்றனர். பின்னும் இமாமவர்களின் காலத்தில் வாழ்ந்த நன்மக்களைப் போன்ருேர் தற்போது இல்லை என்பதற்காக பைஅத்துப் பெருமல் நீ இருப்பாயாயின் ஒன்று நீ இமாம் கஸ்ஸாலியைப் போன்று இருக்க வேண்டும்.

இந்த நன்மக்கள் மட்டும் தான் இப்போதும் கூட ஈருலக வேந்தரான முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர் களின் தொடர்பை கொண்டிருப்பவர்களாகும். முர்ஷித் காமிலாக இருப்போர் மேற்காணும் இரு வர்க்கத்தையும் உள்ளடக்கிய வர்களாக இருக்கலாம். ஆனுல் அவ்விரு வர்க்கத்தாரும் முர்ஷித் காமிலாக இருப்பார்கள் என்பதற்கு எந்த உத்திரவாதமுமில்லை. மேலும் முர்ஷித் காமிலாக இருப்பவர், தாம் விரும்பும் நேரத்தில் விழிப்பிலும் கூட நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம வர்களை சந்திக்கும் மிக உயர்வான படித்தரத்தை கொண்டுள்ள பெருந்தகைகளாகும்.

انهم في يقظتهم يشاهدون الملئكة وارواح الانبيآء ويسمعون منهم اصواتا ويقتبسون منهم فوائد.

"திடனுக அப்பெருந்தகைகள் அமரர்களையும் நபிமார்க ளையும் விழிப்புடைய நிலையில் காண்பவர்களாகும். அவர்க



ளுடைய பேச்சுக்களை செவிமடுப்போர்களாகும். அவர்களிடமி ருந்து பிரயோஜனங்களை பெற்றுக் கொள்பவர்களுமாகும்"

மேலும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தமது அருள் நிறைந்த புனித தேகத்தோடு இப்போதும் ஜீவியத்துடன் தானிருக்கின்றனர். அவர்கள் விரும்பும் இடங்க ளுக்கெல்லாம் சென்றும் வருகின்றனர். அத்துடன் அவர்களால் விரும்பப்படுவோருக்கு அவர்கள் திரையை அகற்றி காட்சியும் கொடுக்கின்றனர் என்பது சுன்னத் வல் ஜமாஅத்தைச் சார்ந்த பெருமக்களின் நம்பிக்கையாகும்.

அடுத்து காமிலான ஷெய்குமார்களிடம் காணப்படும் ஆற்றல் போன்றவைகள் வெறுமனே ஏடுகளை மட்டும் படித்த தனுல் உண்டானதல்ல. மாருக நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் தொடர்பைக் கொண்டு கிடைப்பதாகும். அதனுல்தான் நபிமார்கள் மற்றும் ஸாலிஹீன்களின் பாதை எதுவென்பது அவர்களுக்குத் தெரியுமென்று சொன்னேம். அவர்களின் தொடர்பில் இருப்போர் நேரான பாதையில் இருப்ப தென்பது அவர்களால் கிடைக்கும் சன்மானமாகும். அவர்களது கரத்தை பற்றிப் பிடித்தோர் தீயோரின் பிடியிலிருந்து பாதுகாக் கப்படுகின்றனர். ஆதலால் அவர்களை தேடிச்சென்று அவர்களின் தோழமையை ஏற்படுத்திக் கொண்டு அவர்களிடம் பைஅத்துப் பெற்றுக் கொள்ளுங்கள். இப்போது வாருங்கள். பைஅத்துப் பற்றிய தகவல்களை பார்ப்போம்.

## பைஅத் :-

"அருமை நாயகம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தம்மை சுற்றியிருந்த தோழர்களிடம், அல்லாஹ் வுக்கு எந்தப் பொருளைக் கொண்டும் இணைவைக்க மாட்டோ மென்றும், திருட மாட்டோமென்றும், விபச்சாரம் செய்ய மாட்டோ மென்றும், தமது குழந்தைகளை கொல்ல மாட்டோமென்றும், எங்களுக்கிடையில் ஒருவர் மற்றவரை பற்றி குறைசொல்ல மாட்டோமென்றும், அல்லாஹ்வுக்கு மாறுசெய்ய மாட்டோ மென்றும் என்னிடம் பைஅத்துச் செய்து கொள்ளுங்கள். அதற் குரிய பிரதிபலன் அல்லாஹ்விடம் உண்டு. இதன்பின் மாறு

செய்வீர்களாயின் இவ்வுலகிலேயே நீங்கள் தண்டிக்கப்படுவீர்கள். அதுதான் அதற்குரிய பரிகாரமாகும். மேலும் அல்லாஹ் விரும்பினால் தண்டிப்பான். அல்லது மன்னிப்பான் என்றனர். அதைக்கேட்டு அவர்கள் நாங்கள் பைஅத்துச் செய்தோமென ஹழ்ரத் உபாதா பின் ஸாமித் ரழியல்லாஹு அன்ஹு கூறினர்"

நூல் : புகாரி, முஸ்லிம்.

பைஅத் வாங்கிக் கொள்ளுங்கள் என ஷெய்குமார்கள் தாமாகவே முன்வந்து ஒருவரிடம் கூறுகின்றனர். அவ்வாறு பைஅத்துப் பெற்றுக்கொண்ட ஒருவர் பின்னர் தவறான வழியில் செல்வாராயின் அதனை அல்லாஹ் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பதையும் அவனே அதற்குப் பொறுப்பாளி என்பதையும் எந்த வகையிலும் இது ஷெய்கை கட்டுப்படுத்தாது என்பதையும் மேற்கண்ட ஹதீது நமக்கு எடுத்துக் காட்டுவதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அடுத்து,...

"நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஹழ்ரத் ஸெய்யிதுனா ஹஸன், ஹழ்ரத் ஸெய்யிதுனா ஹுஸைன், ஹழ்ரத் ஸெய்யிதுனா அப்துல்லாஹ் பின் அப்பாஸ், ஹழ்ரத் ஸெய்யிதுனா அப்துல்லாஹ் பின் ஜஃபர் ரழியல்லாஹு அன்ஹும் போன்ற பருவமடையாத சிறுவர்களுக்கு பைஅத்துக் கொடுத்தார்கள்" இந்த ஹதீது தப்ரானி கபீர், மஜ்மவுஸ் ஸவாயித் போன்ற நூல்களில் பதிவாகியுள்ளது.

"ஹழ்ரத் ஸெய்யிதுனா அப்துல்லாஹ் பின் ஜஃபர், ஹழ்ரத் ஸெய்யிதுனா அப்துல்லாஹ் பின் ஸுபைர் ரழியல்லாஹு அன்ஹுமா ஆகிய இருவரும் ஏழு வயதுடையவர்களாக இருந்த போது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களிடம் பைஅத்துச் செய்து கொண்டனர்" இந்த ஹதீது தப்ரானி கபீரிலும் தப்ரானி அஸ்வத்திலும் மஜ்மவுஸ் ஸவாயித் என்னும் நூலிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஹழ்ரத் ஸெய்யிதுனா ஷத்தாத் பின் அவ்ஸ், ஹழ்ரத் ஸெய்யிதுனா உபாதா பின் ஸாமித் ரழியல்லாஹு அன்ஹுமா போன்றோர் அறிவிப்பதானது, "நாங்கள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் திருச்சபையில் இருந்தோம். அது



போது உங்களில் வேதக்காரர் யாராவது இருக்கிறார்களா என நபியவர்கள் கேட்க, இல்லையென்று சொல்லவும் வாசல்கதவை மூடுமாறு சொன்னார்கள். நாங்கள் அவ்வாறே செய்தோம். அதன் பின் நபியவர்கள் அல்லாஹ்வை புகழ்ந்து, இந்தக் கலிமாவைக் கொண்டு நீ என்னை அனுப்பினாய். அதை எத்தி வைக்குமாறு கட்டளையிட்டாய். அதற்காக சுவனத்தை வாக்களித்தாய். நிச்சயமாக நீ வாக்கு மாறாதவன் எனக்கூறிய பின் அல்லாஹ் உங்களின் பாவங்களை மன்னித்து விட்டான் என்று சொன்னார்கள்"

நூல் : அஹ்மத், முஸ்தத்ரக், மஜ்மவுஸ் ஸவாயித்.

"தொழுகையை நிலைநிறுத்த, ஸகாத்தை நிறைவேற்ற ஒவ்வொரு முஸ்லிமுக்கும் உபதேசிக்க நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களோடு பைஅத்துச் செய்து கொண்டதாக ஹழ்ரத் ஸெய்யிதுனா ஜரீர் பின் அப்தில்லாஹ் ரழியல்லாஹு அன்ஹு என்பார் அறிவிக்கின்றனர்" நூல் : புகாரி, முஸ்லிம்.

"நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு நான் வழிப்பட்டு நடப்பேன் என ஹழ்ரத் ஸெய்யிதுனா ஜாபிர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் பைஅத்துச் செய்துகொண்ட ஹதீது புகாரி, முஸ்லிம், நஸாயீ போன்ற நூல்களில் காணப்படுகிறது"

ஹழ்ரத் ஸெய்யிதுனா ஜாபிர் ரழியல்லாஹு அன்ஹுவைக் கொண்டு அறிவிக்கப்படும் மற்றுமோர் ஹதீதானது, "நான் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களிடம், அல்லாஹ்வை வணங்க வேண்டும். தொழுகையை நிலை நிறுத்த வேண்டும். ஸகாத்தை வழங்க வேண்டும். முஸ்லிம்களுக்கு நல்லுபதேசம் செய்ய வேண்டும். முஷ்ரிக்குகளை விட்டும் பிரிந்து வாழ வேண்டும் என்னும் நிபந்தனைகளின் அடிப்படையில் நான் பைஅத்துச் செய்து கொண்டேன் என்கிறார்கள்" நூல் : சுனன் நஸாயீ.

ஆதலால் பைஅத்துச் செய்து கொள்வதும் அதன்படி செயலாற்றுவதும் சுன்னத்தான நடைமுறையாகும் என்பது இதைக்கொண்டு உறுதியாகிறது. இந்நிலையில் குர்ஆனையும் ஹதீதையும் பின்பற்றுவோரென பிரச்சாரம் செய்வோர் ஏன்

பைஅத்துச் செய்து கொள்ளக்கூடாது? அதேநேரம் சிலர், நன்மக்களின் கரத்தை பற்றிப் பிடித்த பிறகும் கூட தவறான வழியில் சென்று விடுவதுண்டு. தரீகத்தில் ஏற்படும் தடங்கல்களை தாங்கிக்கொள்ள இயலாதவர்களும் ஏதோவொரு சுய லாபத்திற்காக இணைந்தவர்களும் தான் அதிகமதிகம் இவ்வாறான நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். சுன்னத் வல் ஜமாஅத்திற்காக இரவு பகல் பாராமல் உழைப்பவர்களும் தியாகங்கள் பல செய்தவர்களும் கூட சில சமயங்களில் வழிதவறிப் போய் விடுவதுமுண்டு. இப்படிப்பட்ட சமயங்களில் அதன் மூலமாக நமக்குக் கிடைக்கப் பெறும் படிப்பினைகள் என்னவென்பதை நாம் யோசித்து நம்மை சரிப்படுத்திக் கொள்ள முயல வேண்டும்.

காமிலான ஷெய்குமார்கள் தற்காலத்திலும் இருப்பதாகச் சொல்கிறீர்கள். இதில் ஒவ்வொருவரும் தத்தம் தமது ஷெய்குமார்களை ஆரிபு பில்லாஹ் என்றும் குத்புல் அக்தாப் என்றும் இன்னும் என்னென்னவோ பட்டங்களைக் கொண்டெல்லாம் வர்ணிக்கின்றனர். அப்படியிருந்தும் எந்தவொரு முரீதும் தனது உண்மையான நோக்கத்தை பெற்றுக் கொண்டவராகக் காணப் படவில்லையே என்பது சிலரது அபிப்பிராயம்.

انما حرموا الوصول لضيعهم الاصول.

**"அடிப்படை சட்டங்களை அவர்கள் இழந்து போயிருப்பதே அதற்குரிய காரணமாகும்"** நான் இன்னாரிடம் பைஅத்துப் பெற்றவன் என்று சொல்லிக்கொள்ள வெட்கப்படுவோர் உங்களில் எத்தனை பேர்? உலகாதாயத்திற்காக பைஅத்துச் செய்வோர், அதற்காக வேண்டி அவர்களிடம் தோழமை கொள்வோர் எத்தனை பேர்? நீங்கள் ஒவ்வொருவரும் உங்களுக்குள் எண்ணிலடங்கா குறைகளை வைத்துக்கொண்டு உங்களை நீங்கள் திருத்திக் கொள்ள முடியாதவர்களாக இருக்கும் நிலையில் நல்லோர்களை குறை சொல்வதால் உங்களுக்கு என்ன லாபம் கிடைக்க முடியும்?

ان الله لا يغير ما بقوم حتى يغيروا ما بانفسهم.

**"எந்தவொரு சமுதாயமும் தனது நிலையை தானாக மாற்றிக் கொள்ளாத வரை அல்லாஹ் அவர்களை கண்டிப்பாக மாற்றுவ**



**தில்லை"** என்பதாக அல்லாஹ்வே சொல்லிக் கொண்டிருக்கிறான். ஆதலால் ஒவ்வொருவரும் தம்மைத் தாமே திருத்திக் கொள்ள முன்வர வேண்டும்.

முரீதீன்கள் ஷெய்கின் முன்னிலையில் ஒரு விதமாக, அதாவது நல்லவர்களை போலவும் பின்னால் வேறு வகையாகவும் இருக்கிறார்களே என நினைப்போர் அடுத்து வரும் நபிமொழியை ஆதாரமாகக் கொள்ளலாம். அதாவது,...

ஹழ்ரத் ஸெய்யிதுனா ஹன்ழலா ரழியல்லாஹு அன்ஹு அறிவிக்கின்றனர். **"ஹழ்ரத் ஸெய்யிதுனா சித்தீகுல் அக்பர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் என்னை சந்தித்த போது எனது நிலைமை என்னவென்று கேட்க, அதற்கு (ஹன்ழலாவாகிய) நான் முனாபிக்காகி விட்டான் என்றேன். அதுகேட்ட தோழரவர்கள், சுப்ஹானல்லாஹ்! நீர் என்ன சொல்கிறீர்? நாம் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் திருச்சபையிலிருந்த போது சுவர்க்கம் நரகம் பற்றி நபியவர்கள் நமக்கு நினைவூட்டிக் கொண்டிருந்தனர். அப்போது அதை நாம் நமது முகக் கண்களால் காண்பதைப் போன்ற உணர்வில் இருந்தோம். அதன்பின் அச்சபையிலிருந்து வெளிப்பட்டு மனைவி மக்களை சென்றடைந்து அவர்களோடு உறவாடிய பின் அதிகமான விஷயங்களை மறந்து விட்டோம் என்றுகூற, எனது நிலைமையும் இவ்வாறு தான் உள்ளது என சித்தீகுல் அக்பரவர்கள் சொல்ல, இதுபற்றி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களிடம் சென்று முறையிட,...**

**எனது உயிர் யார் கைவசமுள்ளதோ அவன் மீதாணையாக என்னிடம் இருப்பதைப் போன்றே சதா இருப்பீர்களாயின் தெருக்களில் மட்டுமல்ல. உங்களின் இல்லங்களில் கூட வானவர்கள் உங்களோடு கைலாகு கொடுப்பார்கள். ஆதலால் ஹன்ழலாவே! கொஞ்சம் கொஞ்சம்"** என்று சொன்ன அற்புதமான அந்த வார்த்தை முஸ்லிம் ஷரீப் என்னும் நூலில் பதிவாகியுள்ளது.

இனி பைஅத்துப் பெற்றவர்கள் தவறான வழியில் சென்று விட்டால் சிலரால் அதை ஜீரணிக்க முடியாமலுள்ளது. இத்தகையோரின் கவனத்திற்கு கீழ்காணும் நபிமொழியை எடுத்துக் காட்டுகிறோம்.

''கிராமப் பகுதியைச் சேர்ந்த அரபி ஒருவர் நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லமவர்களிடம் வருகைதந்து பைஅத்துச் செய்தார். அவர் மதீனா முனவ்வராவில் இருக்கும்போது நோயால் பாதிக்கப்பட்டார். அந்த நோய் பைஅத்துச் செய்து கொண்டதால் தான் தனக்கு ஏற்பட்டதெனக் கருதிய அவர் நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லமவர்களின் சமூகத்திற்குச் சென்று தமது பைஅத்தை வாபஸ் பெற்றுக் கொள்ளுமாறு சொல்ல, அப்படியெல்லாம் வாபஸ் பெற்றுக்கொள்ள முடியாதென்று மறுத்தும் அவர் மதீனா முனவ்வராவை விட்டும் வெளியேறி விட்டார். அதைக் குறித்து நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள், அசுத்தத்தை அகற்றி பரிசுத்தமாக்கும் தன்மை கொண்டதே மதீனாவாகும்'' எனக்கூறிய ஹதீது புகாரி, முஸ்லிம், திர்மிதி, நஸாயி போன்ற நூல்களில் பதிவாகியுள்ளது. இதன் அடிப்படையில் ஒருவர் பைஅத்தை விட்டும் வெளியாகுவா ராயின் அவர் அதில் புகுந்த அசுத்தம் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். மேலும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் அருட் திருக்கரம் பற்றி பைஅத்துச் செய்து இஸ்லாத்தை தழுவிய பலபேர் பின்னர் மதம் மாறிப்போனதும் உங்களுக்குத் தெரியுமென்று நினைக்கிறோம்.

من مات ولم يعرف امام زمانه فقد مات ميتة جاهلية.

"தனது காலத்தில் இமாமாக - ஷெய்காக இருப்பவர் யார் என்பதை அறியாமல் இறப்பவன் ஜாஹிலிய்யத்தான அறியாமைக் காலத்தில் இறந்து போனவனைப் போலாவான்'' இதே கருத்தை அடுத்துவரும் முஸ்லிம் ஷரீபில் பதிவாகியுள்ள நபிமொழியும் நமக்குச் சொல்லிக் காட்டுவதை பாருங்கள்,...

قال رسول الله صلى الله عليه وآله وسلم من مات وليس في عنقه بيعة مات ميتة جاهلية.

"பைஅத் பெற்றுக் கொள்ளாமல் இறப்பவன் மடமைக் காலத்தில் இறப்பவனை போலாவான்''

இதுவரை பைஅத்தைப் பற்றி சொல்லப்பட்ட ஹதீதுகள் எல்லாமே ஜிஹாதைக் குறித்து சொல்லப்பட்ட ஹதீதுகளே அன்றி ஷெய்கு முரீதைப் பற்றியதல்ல என்பதாகச் சொல்லலாம்.



இதில் ஜிஹாத் என்பது இரு வகையென்றும் ஆயுதமேந்தி காபிர்களோடு போர் புரிவதை விட தனது நப்ஸோடு போராடு வதே சிறந்ததாகுமென்று சொன்னதும் நமது நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தான். ஆதலால் நப்ஸோடு போராட வேண்டிய அவசியம் அவர்களுக்கு இருக்கவில்லை. அதனால்தான் இரண்டாவது வகைக்குரிய காபிர்களை எதிர்த்துப் போர் புரியும் ஜிஹாதுக்காக வேண்டி அவர்கள் பைஅத்துச் செய்து கொண்டார்கள். ஆனால் இப்போது நமக்குத் தேவையான தெல்லாம் முதல் வகைக்குரிய போரேயாகும். அதற்காக பைஅத்துச் செய்து நம்மை அந்த நன்மக்களிடம் ஒப்படைத்துக் கொள்வது தவறா? உள்ளம் பரிசுத்தமடைந்த பெருமக்களே பைஅத்துச் செய்திருக்கும் போது நமக்கு மட்டும் ஏன் இந்த வீறுப்பு?

أن الامام الشافعي رضى الله عنه كان يجالس الصوفية كثيرا ويقول : يحتاج الفقيه الى معرفة إصطلاح الصوفية ليفيدوه من العلم ما لم يكن عنده، وقال ايضا حبب الى من دنياكم ثلاث (منها) الإقتداء بطريق اهل التصوف.

"ஸெய்யிதுனா ஹழ்ரத் இமாம் ஷாபி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் அதிகமாக சூபிய்யாக்களுடைய சபைகளுக்கு சென்று வரும் வழக்கமுடையவர்களாக இருந்துள்ளனர். அத்துடன் பகீஹாக (சட்ட நிபுணராக) இருப்போர் அனைவரும் சூபிய்யாக் களின் இஸ்திலாஹை தெரிந்திருப்பது அவசியமாகும் என்றும், அவர்களுடைய சபைகளுக்கு செல்வதால் பல விஷயங்களை தெரிந்து கொள்ளலாமென்றும் கூறுகின்றனர். மேலும் சூபிய்யாக் களின் பாதையை பின்பற்றுவது எனக்கு இவ்வுலகில் மிகப் பிரியமான விஷய்ங்களில் ஒன்றாகும் எனவும் இமாமவர்கள் கூறுகின்றனர்''

இரண்டாம் நூற்றாண்டின் பேரறிஞர்களில் ஒருவரெனப் போற்றப்படும் ஸெய்யிதுனா ஹழ்ரத் சுப்யானுஸ் ஸௌரி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் அபூஹாஷிம் என்னும் பெயரு டைய சூபி மட்டும் இல்லையெனில் முகஸ்துதி என்ன என்பதை நான் தெரிந்து கொண்டிருந்திருக்க மாட்டேன் என்கிறார்கள்.

ياولدي عليك بالحديث واياك ومجالسة هؤلاء الذين سموا انفسهم بالصوفية، فلما صحب (ابا حمزة البغدادى) وعرف احوال القوم اصبح يقول لولده : يا ولدي. عليك بمجالسة هؤلاء القوم، فانهم زادوا علينا بكثرة العلم والمراقبة والخشية والزهد وعلو الهمة.

"ஹழ்ரத் ஸெய்யிதுனா இமாம் அஹ்மத் பின் ஹன்பல் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் சூபிய்யாக்களோடு தோழமை கொள்ளுமுன் சூபிய்யாக்களின் சபைகளுக்கு செல்லக் கூடா தென தனது புதல்வரை எச்சரித்திருந்தனர். பின்னர் அபூஹம்ஸா என்னும் பெயருடைய சூபியின் சகவாசம் ஏற்பட்ட பின் சூபிய் யாக்களின் சபைகளுக்கு கண்டிப்பாகச் செல்ல வேண்டுமென ஆர்வமூட்டுபவர்களாக இருந்தார்கள். கண்டிப்பாக அந்த நன்மக்கள் நம்மைவிட அதிகமான அறிவுடையவர்களாக தமது உள்ளங்களின் ஊசலாட்டங்களை கண்காணிப்பவர்களாக இருக்கின்றனர். அல்லாஹ்வை அதிகமாக அஞ்சுபவர்கள் அவர்க ளாகவே இருப்பதோடு ஸுஹ்துடையவர்களும் முழுமையான ஞானமுடையோரும் அவர்களே என்றும் கூறுபவர்களாக இருந்தனர்"

தௌஹீதுடைய கலிமாவின் அடிப்படையில் இக்லாஸை கடைபிடிக்க வேண்டும். சுன்னத்தை பின்பற்ற வேண்டும். இதுபோன்றே பாவங்களை விட்டு தௌபா செய்து கொள்ளு மாறும், அல்லாஹ் ரஸூலுக்கு வழிப்பட்டு நடக்குமாறும், விலக்கப்பட்ட செயல்களை விட்டும் தீய பண்புகளை விட்டும் பரிசுத்தமாகி, பதவிமோகம், அநீதம், கோபம், பெருமை, பொறாமை போன்றவற்றை விட்டும் நீங்கி நற்பண்புகளையும் உளத் தூய்மையையும் ஏற்படுத்தி சதா இறை சிந்தனையில் இருக்குமாறு உபதேசம் செய்வதும் அதற்காக பைஅத்துச் செய்துகொள்ள ஆர்வமூட்டுபவர்களே சூபிய்யாக்களாகும் என்பதாக அபுல் ஹஸன் நத்வி என்பார் கூறுகிறார்.

"வயிற்றுப் பசியை நீக்குவதற்காக சூபிகளாக இருப்போ ரையும் பெயரளவில் மாத்திரமே சூபிகளாக இருப்போரையும் பிக்ஹையும் சுன்னத்தையும் தெரிந்துள்ளோர் அடையாளம் கண்டு கொள்வர். மேலும் அந்தந்த காலத்திய அறிஞர்கள், பேச்சாளர்கள், பெரியோர்களெல்லாம் யாருக்குப் பணிந்து



பணிவிடை செய்வார்களோ அவரே சூபியாக இருப்பார் என்பதாக இப்னு கையிம் என்பார் அடையாளம் காட்டுகிறார்"

குர்ஆனின் வெளிப்படையான விஷயங்களுக்கு பங்கம் விளைவிக்கும் விஷயங்களை பேசாமல் இருப்போரும் சூபிகள் என்பதாக ஸெய்யிதுனா ஹழ்ரத் சிர்ரிஸ் ஸிக்தி ரஹிமஹுல் லாஹ் கூறுகின்றனர்.

உள்ளங்களை பரிசுத்தப்படுத்தி நற்குணங்களை கற்றுக் கொடுக்கும் விஷயத்தில் சூபிகளுக்கு நிகரானவர் வேறு யாருமில்லை. இவர்கள் குறைந்து போன காரணத்தினாலேயே நாம் இன்று மார்க்கத்தை பறிகொடுத்து விட்டிருக்கிறோம். தற்போது நாம் இன்றும் மார்க்கத்தில் இருப்பதற்கு இவர்களே காரணமாகும் என்கிறார் முஹம்மத் ரஷீத் ரழா என்பார்.

தஸவ்வுப் என்றாலும் சூபி என்றாலும் ஒரு நற்குணம் இன்னொருவருக்கு நற்குணத்தை கற்றுக் கொடுப்பதாகும். எல்லா காலக்கட்டங்களிலும் இத்தகையோர் இருப்பதாகத்தான் சொல்லப்படுகிறது. இனி சூபிகளென பிரபலமானோரிடம் சதாவும் இருப்போர் கூட உளத்தூய்மை பெறாதிருப்பது ஏன்? பசித்திருக்கவோ தனித்திருக்கவோ விழித்திருக்கவோ நீ தயாராக இல்லை. இதில் எதையுமே செய்வதற்கு நீ தயாராக இல்லாத போது நீ செய்வதையெல்லாம் செய்து கொண்டு அந்த நன்மக்களின் குணப்பண்புகள் உன்னிடம் வந்துவிட வேண்டு மென எதிர்பார்ப்பது எந்த வகையில் நியாயமாகும்?

ஷெய்குமார்களின் சபைகளில் அமர்வோர் அவர்களது சபையில் பேசப்படும் கருத்துக்களை முரீதுகள் பாமரர்களுக்குச் சொல்லாமல் இருப்பது நல்லது. காரணம் பாமரர்கள் தெரிந் துள்ள விஷயங்களை மட்டுமே பேசுங்கள் என்பதாக ஹழ்ரத் ஸெய்யிதுனா அலி கர்ரமல்லாஹு வஜ்ஹஹு கூறுகின்றனர். இது முரீதுகள் அவசியம் கடைபிடிக்க வேண்டிய விஷயங் களில் ஒன்றாகும்.

இதுபோன்றே சூபிய்யாக்களின் தோழமையில் சகவாசத்தில் இருக்கும் முரீத் அல்லாஹ்வால் நன்மையைக் கொண்டு நாடப்

பட்டவராகும் என அல்லாமா அப்துல் வஹ்ஹாபுஷ் ஷ.்.ருனி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் குறிப்பிடுகின்றனர். மார்க்கக் கல்வியில் அவருக்கு நிகரானவர்கள் வேறு யாருமில்லை. அவரோடு போட்டி போட முடியாது. மகா திறமைசாலி என்றெல்லாம் பேசப்படும் ஒருவராக இருந்தாலும் அரபி மொழிகளை மட்டுமல்ல. எல்லா மொழிகளையும் சரளமாகப் பேசும் திறமையுடையவராக இருந்தாலும் அவரும் சூபிய்யாக்களோடு இணையாத வரை தரீக்குல் முஸ்தகீம் என்னும் நேரான பாதையை பெற்றுக் கொள்ள முடியாது. அவரும் யாராவது ஒரு ஷெய்கின் முரீதாக இருக்க வேண்டும் என்பதே நல்லோரின் தீர்ப்பாகும். ஷெய்குடைய வழி காட்டுதல் இன்றி உண்மை நோக்கம் ஒருபோதும் நிறைவேறாது.

ஷெய்குமார்களின் திருக்கரத்தை பற்றிப் பிடித்தபின் அவர்களை மதிக்காது தனது மமதையினால் திசை மாறிப்போன பல்வேறு அறிஞர்களை நாம் அறிவோம். ஷெய்குமார்களின் நல்லுபதேசங்களை உதாசீனப்படுத்துவோருக்கு பல்வேறு வகையான சோதனைகள் வந்தடையும் என்பதற்கு இவர்களை உதாரணவாதிகளாக எடுத்துக் காட்டினாலும் சரியானதே. இந்த இடத்தில் அத்தகைய பாதிப்புக்கு ஆளாகி சிதறுண்டு போன சில உலமாக்களை பற்றிச் சொன்னால் மிகவும் உசிதமாக இருக்குமென்று நினைக்கிறோம்.

## தப்லீக் உலமாக்களே உங்களுக்கு,...

இந்திய தேசத்தில் பல கலைகளிலும் பாண்டித்தியம் பெற்ற சில உலமாக்கள் இருந்தனர். இன்னோரை பேரறிஞர்களென்று சொன்னாலும் தவறில்லை. இவர்களும் தரீகத்தை சார்ந்த அறிஞர்களாகவே இருந்தார்கள். ஷெய்குமார்களை மதிப்பவர்களாக, அவர்களின்றி உள்ளம் தூய்மை பெறாது என்னும் திடமான நம்பிக்கையில் இருந்தவர்கள். இவர்கள் யார் தெரியுமா? ஒருவர் மௌலவி அஷ்ரப் அலி தானவி என்பாராகும். (இவரது பிறப்பு 5, ரபீவுல் ஆகிர், 1280 தானபவன் முழப்பர் நகர். இறப்பு 16-ரஜப் 1362. தானபவன்) அடுத்தவர் மௌலவி ரஷீத் அஹ்மத் கங்கோஹி (இவரது பிறப்பு 6, துல்க.்.தா, 1244 கங்கோஹி ஸஹாரன்பூர். மறைவு 23, ரமழானுல் முபாரக், 1323 ஜன்னத்துல்



முஅல்லா) இன்னொருவர் மௌலவி காசிம் நானூத்வி (இவரது பிறப்பு 1248 நானூத்தா. மறைவு 4, ஜமாதில் ஊலா, 1297 தேவ்பந்த்) வேறொருவர் மௌலவி கலீல் அஹ்மத் அம்பேட்டி. (இவரது பிறப்பு ஸபர் மாதம் இறுதி, 1269 நானூத்தா ஸஹாரன்பூர். மறைவு 16, ரபீவுல் ஆகிர், 1346, ஜன்னத்துல் பகீ.்.) இவர் அல்லாமா ஸைனீ தஹ்லான் ரஹிமஹுல்லாஹ் அவர்களின் மாணவராகும். இப்போது இவர்கள் தமது நூல்களில் ஷெய்குமார்களை பற்றி எப்படியெல்லாம் எழுதி வைத்திருக்கிறார்கள் என்பதை பாருங்கள்.

மேலும் இவர்களனைவரும் அஷ்ஷெய்கு ஆரிபுல் கபீருல் அஜல்லு மௌலானா ஹாஜி இம்தாதுல்லாஹ் முஹாஜிர் மக்கீ ரஹிமஹுல்லாஹ் (பிறப்பு 8, ஸபர், 1233. நானூத்தா ஸஹாரன்பூர். மறைவு 12, ஜமாதில் ஆகிர், 1317 ஜன்னத்துல் முஅல்லா) என்பாரிடம் பைஅத்துச் செய்து கொண்டவர்கள். அது மட்டுமல்ல. இவர்கள் அந்தத் தரீகத்தின் கலீபாக்களுமாவர். இவர்களுக்கும் முரீதுகள் இருக்கின்றனர். பைஅத்துச் செய்து கொள்ள வேண்டுமாயின் அது ஹாஜி சாஹிபிடம் தானென்று சொல்லிக் கொண்டிருந்தவர் காசிம் நானூத்வியாகும். ஒருமுறை உங்களுடைய ஷெய்கு ஆலிமாக இல்லையே என காசிம் நானூத்வியிடம் ஒருவர் சொன்னதைக் கேட்டு அழுதவராக, அவர்கள் ஆலிமாக இல்லையென்றாலும் கூட உலமாக்களால் விளங்கிக்கொள்ள முடியாத ஞான விளக்கங்களையெல்லாம் தமக்குள் கொண்டுள்ள ஆரிபு பில்லாஹ் என்று சொன்னார். ஒரு சபையில் ஹழ்ரத் ஜுனைதுல் பக்தாதி போன்ற பெருமக்கள் வீற்றிருந்தாலும் கூட நான் அவரை ஏறெடுத்தும் பார்க்க மாட்டேன். அவர் எனது ஷெய்கின் ஷெய்காக இருந்தாலும் கூட நான் எனது ஷெய்கை தான் பின்பற்றுவேன். எனது தொடர்பு முழுவதும் எனது ஷெய்கிடம் மட்டுமே. எனக்குக் கிடைக்கும் எல்லாமே அவரைக் கொண்டுதான் என்று சொன்னவர் ரஷீத் அஹ்மத் கங்கோஹியாகும்.

ஒரு ஷெய்குடைய கரத்தை பற்றிப் பிடிக்காதவன் வழி தவறி விடுவான். நாங்கள் எங்களின் நாதாக்களுடைய சபைகளில் அமர்ந்திருக்கும் போது உள்ளத்தில் உயிரோட்டத்தை காணுகிறோம். ஷெய்கை முரீதானவர் எல்லோரையும் விட

மேலானவராக கருத வேண்டும். முரீத் தன்னை தனது ஷெய்கிடம் முழுமையாக ஒப்படைத்து விட வேண்டும். தனக்கென்று ஒரு அணுவளவு கூட சுய விருப்பம் என்பது இருக்கக் கூடாது. ஷெய்கின் அனுமதியின்றி எந்தவொரு முஸ்தஹப்பான அமலையும் செய்யக்கூடாது. நாம் செய்யும் அமலில் ஓதுவதில் பிரயோஜனம் உண்டா இல்லையா என்பதை அவர் மட்டுமே அறிவார். ஷெய்கின் உத்திரவில்லாமல் முரீத் எந்தவொரு செயலையும் செய்யவே கூடாது. இதை மீறுவோர் ஆபத்தில் விழ நேரிடலாம் என்று சொல்பவர் அஷ்ரப் அலி தானவியாகும்.

என்னிடமுள்ள அனைத்தும் எனது ஷெய்கின் பரக்கத்தால் கிடைத்ததாகும் என்னும் அகீதாவையும், நீ உனது ஷெய்கை எப்படிக் கருதுகிறாயோ அது அவரில் காட்சியளிக்கும் உனது தோற்றமேயன்றி அவருடைய தோற்றமல்ல எனக் கூறுவதோடு தனது ஷெய்கின் பெயர் சொல்லப்பட்டால் தன்னை மறந்து ஆட்டம் போடக் கூடியவராகவும் இருந்திருக்கிறார். பார்க்க: மல்பூஸாத் அஷ்ரப் அலி, பாகம்-1-192, 375 355, 402, 542, 543, 561. நவாதிரே இம்தாதிய்யா, 27. அல்லாஹ்வுடன் அமர விருப்பமுள்ளவர் சூபிய்யாக்களுடன் அமர்ந்து கொள்ளட்டும் என்று சொல்லும் அஷ்ரப் அலி தானவி அவர்கள், இதோர் நபிமொழி என்றும் தமது **'அத்தகஷ்ஷுஃப்'** என்னும் நூலில் குறிப்பிடுகிறார்.

மதீனா முனவ்வராவில் ரௌழா ஷரீப் சுத்தம் செய்யப்பட்ட போது அங்கே சேகரிக்கப்பட்ட சில பொருட்கள் ரஷீத் அஹ்மத் கங்கோஹிக்கு வந்து கிடைத்தது. அதை அவர் தமது சுர்மா டப்பாவில் கலந்து வைத்துக் கொண்டு மரணிக்கும் வரை கண்ணில் தடவி வந்தார் என்று காசிம் நானூத்வியின் பேரர் அனீசுர்ரஹ்மான் காசிமி என்பார் **'பஸந்தீதா வாகிஆ'** - விருப்பமான நிகழ்ச்சிகள் என்னும் நூலில் 213ம் பக்கத்தில் கூறுகிறார்.

என்னிடமுள்ள லட்சோப லட்ச ஆசைகளில் மிக மிகப் பிரதானமான ஆசை என்னவென்றால் மதீனா முனவ்வராவில் வாழும் நாய்களில் ஒன்றாக நான் கருதப்பட்டு அப்புனித ஸ்தலத்தின் தெருக்களை உலாவர வேண்டும். அங்கேயே செத்து மடிந்து எனது மாமிசத்தை அங்குள்ள பூச்சி புழுக்கள் உண்ண



வேண்டும் என்பதேயாகும் என்று சொல்பவர் காசிம் நானூத்வியாகும். 18-முஹர்ரம் பிறை 1288ல் அடிக்கல் நாட்டப்பட்ட இவரது அரபிக் கல்லூரிக்கு நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அடிக்கல் நாட்டியதாகவும் அடிக்கடி நபியவர்கள் தமது கலீபாக்களுடனும் தோழர்களுடனும் வருகை தந்து மத்ரஸாவை பார்த்து விட்டு செல்வதாகவும் காசிம் நானூத்வியின் கூற்று 'அல் அர்வாஹுஸ் ஸலாஸா' என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது. நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு நிகரான எவரும் இந்த அகிலத்திலேயே இல்லை. நபியவர்களிடமுள்ள அறிவு ஞானங்களுக்கும் நிகர் யாருமில்லை என்று மௌலவி அஷ்ரப் அலி தானவி 26 ஜமாதில் அவ்வல் 1361ல் சொன்ன வார்த்தை அவருடைய மல்பூஸாத் 3-557ல் பதிவாகியுள்ளது.

நபிமார்கள் தமது மண்ணறைகளில் உயிரோடு இருக்கின்றனர். நமது அழைப்புக்களை அவர்கள் செவி மடுக்கின்றனர். நமது ஸலாமுக்கு பதிலும் சொல்கின்றனர். மண்ணறைகளில் வாழ்ந்து கொண்டே நமது தீய செயலுக்காக அல்லாஹ்விடம் பிழை பொறுக்கவும் தேடுகின்றனர் என்பன போன்ற கருத்துக்கள் மௌலானா ஸகரிய்யா என்பாரின் 'ஸலவாத்தின் சிறப்பு' என்னும் நூலில் பதிவாகியுள்ளது. அதேநேரம் மறு பக்கம், 'யா ரஸூலல்லாஹ்!' என்று சொல்வதை ஷிர்க்கென்று வஹ்ஹாபிகள் சொல்வதைப் போன்று இவர்கள் ஏன் பிரச்சாரம் செய்தனர்?

ஸவானிஹ் காசிமி, அஷ்ரபுஸ் ஸவானிஹ், அர்வாஹுஸ் ஸலாஸா, இம்தாதுல் முஷ்தாக், தத்கிரதுர் ரஷீத், தத்கிரத்துல் கலீல் போன்ற இந்த உலமாக்களின் நூல்களையும் அஷ்ரப் அலி தானவி அவர்களின் ஹிப்ழுல் ஈமான் என்னும் நூலையும் கங்கோஹி மற்றும் அம்பேட்டியின் பாராஹீனே காதிஆ என்னும் நூலையும் நானூத்வியின் தஹ்தீருன்னாஸ் என்னும் நூலையும் ஒப்பிட்டுப் பார்ப்போருக்கு இவர்களின் உண்மையான தோற்றம் என்னவென்பது தெள்ளத்தெளிவாகி விடும்.

தரீக்கத்தில் உறுதியாக இருந்த இந்த உலமாக்கள் பின்னர் ஏன் ஒதுக்கப்பட்டார்கள்? நாங்கள் வஹ்ஹாபிகளல்ல என்று கூட அஷ்ரப் அலி தானவி தமது மல்பூஸாத்தில் கூறுவது